விலை ரூபா: 6.00

பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka




# வலம்புரி
# VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2033 மார்கழி 25 வியாழக்கிழமை (09.01.2003) தொலைபேசி- 2223378 ஒலி 21

# "கரும்புலி" அணியை கலைக்குமாறு புலிகளிடம் கேட்க முடியாது!



இவ்வாறு சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் அரச குழுவின் தலைவர் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

வடுதலைப் புலிகள் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துடன் சமாதான முயற்சியில் நேர்மையுடன் செயற்படுவது உண்மையெனில், தமது கரும்புலிகள் தாக்குதல் அணியைக் கலைத்து தமது உண்மையான சமாதானத்தின் மீதான பற்றுதியை வெளிப்படுத்த வேண்டுமென்று,ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கருத்து வெளியிட்டிருந்தார்.

## ஜனாதிபதி தெரிவித்த கருத்துக்கு அமைச்சர் பீரிஸ் பதில்

(பாங்கொக்கிலிருந்து அன்ரனிஜீவா)

**தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உயர் தாக்குதல் பிரிவான கரும்புலிகள் தாக்குதல் அணியைக் கலைத்து,அவ்வமைப்பை இல்லாமல் செய்து விடுமாறு விடுதலைப் புலிகளைக் கோருவது சமாதானப் பேச்சுக்களின் போதுஅவர்கள் மீது விதிக்கப்படும் நிபந்தனையாக அமைந்துவிடும்.**

இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில்லான முதலாம் சுற்றின் நான்காம் கட்டப் பேச்சுவார்த்தையின் மூன்றாம் நாள் அமர்வுகள் நேற்று தாய்லாந்தின் நொக்கம் பத்தோம் நகரிலுள்ள "றோஸ்கார்டின் ரிசோர்ட்" ஹோட்டலில் நடைபெற்றது.

இரு அமர்வுகளாக நடை பெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து அமைச்சர் பீரிஸ் பத்திரிகையாளர்களைச்

(10ம் பக்கம் பார்க்க)



## உண்ணாவிரதம் தொடர்கிறது

(ஏழாலை)

வலி.வடக்குப் பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்தமக்களை மீளக்குடியமர்த்தக கோரி வலி.வடக்குப் பிரதேச செயலகம் முன்பாக நேற்று நான்காவது நாளாகவும் உண்ணாவிரதம் மற்றும் மறியல் போராட்டம் இடம் பெற்றது.

மறியல் போராட்டம் காரணமாக வலி.வடக்குப் பிரதேச செயலகம் கடந்த மூன்று நாட்களாக முற்றாக செயலிழந்தது. (த-12)

# தமிழரின் அபிலாஷை நிறைவேற புலிப்படை அணிகள் அவசியம்!



## தாய்லாந்தில் பாலசிங்கம் கருத்து

தற்பொழுது செயற்பாட்டில் இல்லை. இருப்பினும் கரும்புலிகள் அணி,தமிழீழ போராட்ட வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அமைப்பு.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகளின் பேச்சுவார்த்தைக் குழுவுக்கு தலைமையேற்று தாய்லாந்தில் தங்கியிருக்கும் ஆலோசகர் பாலசிங்கம் நேற்று பத்திரிகை

விடுதலைப் புலிகள் தமது சமாதான சமிக்ஞையை உண்மையானதாக நிரூபிக்க வேண்டுமென்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கையிலேயே பாலசிங்கம் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், விடுதலைப்புலிகளின் இராணுவப் படைப்பிரிவும், கரும்புலிகள் பிரிவும் தற்போது போர் நிறுத்தத்தைக் கடைப்பிடித்து வருகின்றன.

எனவே நடைமுறையில் அப்பிரிவுகள் செயலாக்கத்தில் இல்லை.

## ராக்கிங் செய்த மாணவர்களை பயணிகள் திரண்டு எச்சரித்தனர்

### காரைநகர் மினிபஸ்ஸில் சம்பவம்

(காரைநகர்)

யாழ்.பல்கலைக் கழக சிரேஷ்ட மாணவர்கள் சிலரின் பகிடிவதை நடவடிக்கைகளினால்,காரைநகர் நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனி

சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகர் நோக்கிச் சென்று கொண்டிருந்த மினிபஸ்சில் பல்கலைக்கழக புகுமுக மாணவிகள் இருவர் பயணம்



(பாங்கொங்)

விடுதலைப் புலிகள் அமைப்பின் கருமபுலிகள் தாக்குதல் பிரிவு அணி

சமாதானப் பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகளின் பேச்சுவார்த்தைக் குழுவுக்கு தலைமையேற்று தாய்லாந்தில் தங்கியிருக்கும் ஆலோசகர் பாலசிங்கம் நேற்று பத்திரிகையாளர்களைச் சந்தித்துப் பேசும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கரும்புலிகள் அமைப்பைக் கலைத்து படைப்பிரிவும், கருமபுலிகள் பிரிவும் தற்போது போர் நிறுத்தத்தைக் கடைப்பிடித்து வருகின்றன.

எனவே நடைமுறையில் அப் பிரிவுகள் செயலாக்கத்தில் இல்லை. தமிழ் மக்களின் உரிமைகளை பேரம் பேசிப் பெறுவதற்கான சக்தியே புலிகளின் படையணிகள்.

(10ம் பக்கம் பார்க்க)

(காரைநகர்)

யாழ்.பல்கலைக் கழக சிரேஷ்ட மாணவர்கள் சிலரின் பகிடிவதை நடவடிக்கைகளினால்,காரைநகர் நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார்சிற்றூர்தியொன்று 15 நிமிடங்கள் வரை போக்குவரத்தை தொடர முடியாமல் ஸ்தம்பித்து நின்றது.

நேற்று மாலை இடம் பெற்ற இச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகர் நோக்கிச் சென்று கொண்டிருந்த மினிபஸ்சில் பல்கலைக்கழக புகுமுக மாணவிகள் இருவர் பயணம் செய்தனர். அதே பஸ்ஸில் பயணம் செய்த சிரேஷ்ட மாணவர்கள் சிலர் அம்மாணவிகளை பகிடிவதைஎன்ற

(10ம் பக்கம் பார்க்க)

### யாழ்.அரச அதிபரின் ஏற்பாட்டில்

## காணாமல் போனோர் சங்கம் பிரதமரின் செயலருடன் சந்திப்பு

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டில் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள் நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் செயலர் பிரெட்மன் வரக்கோனை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

பிரதமரின் அலுவலகத்தில் முற்பகல் 11மணிக்கு இடம் பெற்ற இச் சந்திப்பில், காணாமல் போனோர் தொடர்பான விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இச் சந்திப்பில் (10ம் பக்கம் பார்க்க)

# மீளக்குடியமர்வு-புனர்வாழ்வு செயற் திட்டம் தயாரிப்பு !

*—அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு—*

(பாங்கொக்)

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தல் மற்றும் புனர்வாழ்வு புனரமைப்பு வேலைகள் தொடர்பான செயற் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளதாக சமாதானப் பேச்சுவார்த்தையில் பங்கு கொள்ளும் அரச தரப்புப் பிரதிநிதிகளின் தலைவரான அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அரசு-விடுதலைப் புலிகளுக்கிடையில் தாய்லாந்தின் றோஸ்கார்டின் ஹோட்டலில் இடம் பெற்ற நான்காம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் மூன்றாம் நாள் அமர்விலேயே இந்தத் திட்டவரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பீரிஸ் மேலும் தெரிவிக்கையில்;

(10ம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சுவார்த்தையை குழப்பும் எண்ணம் ஜனாதிபதிக்கு இல்லை

*—ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தகவல்—*

(கொழும்பு)

ஐககிய தேசிய முன்னணி அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தையை குழப்பும் எண்ணம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அறவே இல்லையென்று ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

ஊடகப் பேச்சாளர் ஹரீம்பீரிஸ் நேற்றுக் காலை பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்தினார். அம் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடை பெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஜனாதிபதியின் சார்பில் ஒரு பிரதிநிதிநியமிக்கப்படாமை கவலையளிக்கிறது.

(10ம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை இறங்கு துறையில் நேற்றும் மறியல் போர்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பலில் இருந்து பொருட்களை லொறிகளில் ஏற்றுவதில் இடம் பெற்ற சம்பவங்களைக் கண்டித்து நேற்று இரண்டாவது நாளாகவும் மறியல் போராட்டம் இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட தனியார் பாராவூர்திச் சங்கத்தின் நூற்றுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் பருத்தித்துறை துறை முகத்திற்குச் செல்லும் பாதையை வழிமறித்து போராட்டம் மேற் கொண்டனர்.

இப் போராட்டத்தையடுத்து லொறிகள் எவையும் துறைமுகத்திற்குள் செல்ல அனுமதிக்கப்படாததுடன் கப்பலில் இருந்து பெருட்களை இறககும் பணிகளும் இடம் பெறவில்லை.

இதேவேளை இம்மறியல்போராட்டத்தில்

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## தொழில் சார்சட்ட மூலங்கள் நான்கின் மீது கட்சித் தலைவர்கள் கூட்டத்தில்

# முதலில் விவாதம் நடத்தப்படும்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்ட 4 தொழிற் பிரேரணைகள் தொடர்பான விவாதம் கட்சித் தலைவர்களின் கூட்டமொன்றிலேயே விவாதிக்கப்படும் என தீர்மானிக்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்தராஜபக்ஷ விடுத்த வேண்டுகோளினை அடுத்து இந்நான்கு பிரேரணைகள் தொடர்பாக மேலும் கட்சித் தலைவர்களின் கூட்டமொன்றில் ஆராயவதென நேற்று பாராளுமன்றத்தில் தீர்மானிக்கப்பட்டது

தொழில்துறை, தொழில் வேலை வாய்ப்பு அமைச்சர் மகிந்தசமரசிங்க 4 பிரேரணைகளையும் சபையில் சமர்ப்பித்த போதே எதிர்க்கட்சித் தலைவர் தமது வேண்டுகோளை விடுத்தார்.

இவ் உத்தேச சட்ட மூலங்கள் நான்கும் தொடர்பாக பிரதமருடன் கலந்துரையாட எண்ணி இருப்பதால், பாராளுமன்ற அமர்வுகளை தற்காலிகமாக இடை நிறுத்துமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை, இந்நான்கு பிரேரணைகள் தொடர்பாக இவ்விவாதத்தை வேறு ஒரு நாளுக்கு ஒத்திவைக்குமாறு மக்கள் விடுதலை முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் விமலவீரவன்சாவும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் இரா. சம்பந்தனும் கேட்டுக் கொண்டனர்.

இவ்வேளையில் சபாநாயகர், கட்சித் தலைவர்களின் கூட்டத்திலேயே இப் பிரேரணைகள் தொடர்பானவிவாதம் நடத்தப்பட இருப்பதாக தனது அறிவிப்பை வெளியிட்டார்.

ஆனாலும், இது சம்பந்தமாக பாராளுமன்றத்தின் முடிவை அமுல்படுத்த முடியும் எனவும் சுட்டிக் காட்டினார்.

பாராளுமன்றத்தில் தொழிற்சாலை பிணக்கு விசேட ட்டளை சட்டமூலம், தொழிற்சாலை பிணக்கு ... சட்டமூலம், தொழி... ளின் தொழிலை... கொண்டு வரும் வி... ட்டளைச் சட்டமூல... ங்கள் இளைஞர் க... ஆகியோரை தொழிலில் ஈடுபடுத்துவது தொடர்பான திருத்த சட்டமூலம் ஆகிய நான்கு சட்டமூலங்களுமே சமர்ப்பிக்கப்பட்டன.

(பி-8)

## உலர் உணவு நிவாரணம் பெறுவோர் தொகை மீளாய்வு

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உலர் உணவு நிவாரணம் பெறுபவர்களின் தொகை மீளாய்வுக்கு உட்படுத்தப்படவுள்ளது.

இம் மாதம் 12 ஆம் திகதிக்கு முன்பாக இம்மீளாய்வை முடித்து அந்த அறிக்கையை தமக்குச் சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலர் கிராம அலுவலர்களுக்குப் பணித்துள்ளார்.

(உ-258)

## பொருளாதார மறுசீரமைப்பு கருதி வட்டி வீதம் குறைப்பு

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி வட்டி வீதத்தைக் குறைத்துள்ளது.

இதற்கமைய மத்தியவங்கியின் நேயரி கொள்வனவு வீதம் 9 சதவீதத்தால் நேற்று முன்தினம் குறைக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தை மறுசீரமைக்கும் நோக்குடனேயே இவ்வட்டிவீதக் குறைப்புகள் இடம்பெறுவதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

2001 ஆம் ஆண்டில் காணப்பட்ட 10.3 வீத பண... காணப்பட்டது. ... டிசம்பர்மாதத்தில் 6.8 சதவீதமாக குறைவடைந்துள்ளது என வும் மத்திய வங்கி சுட்டிக் காட்டியுள்ளது.

(உ-8)

## 20 தமிழர் படுகொலை திருமலையில் விசாரணை நடத்த வேண்டாம்

(கொழும்பு)

கந்தளாய், பாரதிபுரம் இராணுவ சோதனை நிலையத்திற்கும் 1997 ஆம் ஆண்டு இருபது தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட 13 சந்தேகநபர்களுக்கெதிராக வழக்கு தாக்கல் செய்யப்படவிருக்கிறது.

இவ்வழக்கின் விசாரணைகளை திருகோணமலையில் நடத்தக்கூடாதெனக் கோரி சந்தேகநபர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

புலிகள் மூலம் தமக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும், அதனால் வழக்கை அனுராதபுரத்திலோ அல்லது குருநாகலிலோ வைத்துக்கொள்ளுமாறும் சந்தேகநபர்கள் தமது மனுவில் கேட்டுக்கொண்டுள்ளனர்.

13 சந்தேகநபர்களில் ஒருவர் ஏற்கனவே புலிகளால் கொல்லப்பட்டிருப்பதாகவும் மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

விசேட புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் எதிர்மனுதாரர்களாக குறிக்கப்பட்டுள்ளனர்.

(பி)

## 2001ம் ஆண்டு தேர்தல் பற்றிய ஐரோ. ஒன்றிய அறிக்கை தேர்தல் ஆணையாளரிடம்.

(கொழும்பு)

கடந்த 2001 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி நடத்தப்பட்ட பொதுத் தேர்தல் தொடர்பான ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கை தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக பிரதமர் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் நிமால்சிறிபால டி.சில்வா வாய்மூலம் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பிரதமர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கை தொடர்பாக கட்சித் தலைவர்களின் கூட்டத்தில்பேசப்பட்ட பின்னர் சட்ட வரைபு ஒன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.

வாக்களிக்கும் போது, வாக்காளர் அடையாள அட்டைகளை ... கட்டாயம் வைத்திருக்க ... என்பது குறித்தும் அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படவுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் பொதுத் தேர்தல் தொடர்பான தங்களது அறிக்கையில் 11 ஆலோசனைகளை முன்வைத்துள்ளது.

அவற்றில் 17 வது அரசியல் சட்டமூலம் முழுமையாகவும், விரைவாகவும் அமுல்படுத்தப்படுவது, பாராளுமன்ற தேர்தல் சட்ட மூலத்தை திருத்தி வாக்குகளை பாவிக்கும்போது வாக்காளர்களை அடையாளப்படுத்தும் திட்டம் ஒன்றும் அமுல்படுத்துவது போன்ற கோரிக்கைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(பி)

## கால்கோள் விழா

(சண்டிலிப்பாய்)

யா/சென் ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலையில் தரம் ஒன்று மாணவர்களை அனுமதிக்கும் கால்கோள் விழா இன்று காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

(உ-258)

## இளைஞனுக்கு கைமுறிந்தது

(யாழ்ப்பாணம்)

கால்பந்து விளையாடிய போது தடுக்குண்டு வீழ்ந்து வலதுகை மணிக்கூட்டுப்பகுதியில் முறிந்த நிலையில், யாழ். போதனாவைத்தியசாலையில் இளைஞர் ஒருவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் கொக்குவில் தாவடியைச் சேர்ந்த அருட்பிரகாசம் பரங்குன்றம் (வயது-24) என்பவரே கை முறிந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

(த)

## புதியகற்கை நெறிகள்

(ஈச்சமோட்டை)

கரவெட்டி பிரதேசசம்மேளனத்தினால் தமிழ், ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்து, தையல், தலை அலங்காரம் ஆகிய புதிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ள இக்கற்கைநெறிகள் கரவெட்டி, உடுப்பிட்டி பிரதேச சம்மேளனத்தில் நடைபெறவுள்ளன.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை அலுவலகங்களில் பெற்று பூர்த்திசெய்து சமர்ப்பிக்குமாறு கரவெட்டி பிரதேச சம்மேளனத் தலைவர் எஸ். தாகூர் கேட்டுள்ளார்.

(உ-59)

## ரஷ்யப் பெண் டாக்டர் கத்தியால் குத்திக் கொலை

### கிருலப்பனையில் சம்பவம்

(கொழும்பு)

கிருலப்பனை ஜயசிங்க மாவத்தையில் ரஷ்யப் பெண் டாக்டர் ஒருவர் நேற்று முன்தினம் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

எயோனிகாபர் வேவ்னா (வயது 33) என்ற ரஷ்யப் பெண் டாக்டரே கத்திக் குத்துக்கு இலக்காகி மரணமடைந்துள்ளார்.

மேற்படி வைத்தியர் தங்கி இருந்த வீட்டுக்கு அருகே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை கிருலப்பனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(உ-8)

## முதியோர் இல்லத்திற்கு புதிய விடுதிக் கட்டடம்

(சுதுமலை)

கைதடியில் உள்ள முதியோர் இல்லத்திற்கு புதிய விடுதிக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு சமூக சேவைகள் திணைக்களம் சுமார் ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த சமூக நலநோம்பு அமைச்சர் ரவீந்திர சமரவீர கைதடியில் உள்ள முதியோர் இல்லத்திற்கு விஜயம் செய்த போது யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ. பத்மநாதனிடம் ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாவிற்கான காசோலையை கையளித்தார்.

(உ-252)

## தொழில் பிணக்குகள் சட்டமூலம் நிறைவேற்றம்

(கொழும்பு)

தொழிற்பிணக்குகள்வழக்குகளை விசாரித்தல் மற்றும் தீர்மானித்தல் சம்பந்தமான சிறப்புஏற்பாட்டுச்சட்டமூலம் 34மேலதிக வாக்குகளால் நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில்நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சட்டமூலத்துக்கு ஆதரவாக 116 வாக்குகளும் எதிராக 82 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

தமிழ்க்கட்சிகள் அனைத்தும் ஆளும் அரசுடன் இணைந்தே இச்சட்டமூலத்துக்கு வாக்களித்தமை குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் மக்கள் விடுதலைமுன்னணி போன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இச் சட்டமூலத்துக்கு எதிராக வாக்களித்தனர்

(உ-8)

## மீசாலை அபிவிருத்திக்கு ரவிராஜ் எம்.பி.ஒத்துழைப்பு

(மீசாலை)

மீசாலைக் கிராம அபிவிருத்தி குறித்த கலந்துரையாடல் அண்மையில் அறுகம்புல பிள்ளையார் ஆலயத்தில் இடம் பெற்றது.

எஸ். சந்திரசேகரம் தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் தமிழர் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் கலந்து கொண்டார்.

இக் கிராமத்தில் தற்போதைய நிலைமைகுறித்துகிராமவாசிகள் ரவிராஜிடம்விரிவாக எடுத்துக் கூறினர்.

வரவு செலவுத் திட்ட நிதியில் கூட்டமைப்பிற்கு 50 இலட்சம் மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளதால் அதனைக் கொண்டே யாழ் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டி இருக்கின்றன.

எனவே இக்கிராம முன்னேற்றத்திற்கு பூரண நிதி உதவியை எம்மால் வழங்க முடியாது ஆனால் பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று குறிப்பிட்டார்.

(உ-248)

## காணாமல் போனோர் பற்றி சாவகச்சேரியில் இன்று விசாரணை

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகளை நேற்று ஆரம்பித்துள்ள தேவநேசன் நேசையா தலைமையிலான குழு இன்று சாவகச்சேரிப் பகுதியில் தமது பணிகளை ஆற்றவுள்ளது.

இந்த வகையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் ஒதுக்கப்பட்ட அறையில் இப் பகுதியில்காணமல்போனோர் தொடர்பான விசாரணைகள் இடம்பெறவுள்ளன.

உரியவர்களுக்கு இதற்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று யாழ். வந்துள்ள காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகளை நடத்தவென நியமிக்கப்பட்ட குழுவின் தலைவர் தேவநேசன் நேசையா, மற்றும் நுண்ணாய்வுத் துறையைச் சேர்ந்த ஆர். மங்கையர்க்கரசி, எஸ் சுப்பிரமணியம் ஆகியோர் இவ் விசாரணைகளில் ஈடுபடவுள்ளனர்.

இவர்கள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரையான காலப்பகுதியில் இங்கு தங்கியிருந்து 59 முறைப்பாடுகள் குறித்த முதற்கட்ட விசாரணைகளை நடத்தவுள்ளனர்.

(உ.16,6)

## சமுர்த்திச் சங்கக் கூட்டம்

(சண்டிலிப்பாய்)

யாழ். மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மாவட்டச் சங்கத்தின் நிர்வாகக் கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10மணிக்கு வைத்தீஸ்வராக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் முன்னேற்றம் மற்றும் பிற முக்கிய விடயங்கள் பற்றியும் இதில் கலந்துரையாடப்படவுள்ளதால் அனைத்து பிரதேச செயலகங்களையும் சேர்ந்த சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மன்ற உறுப்பினர்களையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு மாவட்ட சங்க செயலாளர் எஸ். கபிலன் கேட்டுள்ளார்.


(உ-258)

# நினைவை விட்டகலாத நிகழ்வுகளைக் கொண்ட யாழ் நகரின் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு

"தமிழுக்கு அமிழ்தென்று பெயர், தமிழ் எங்கள் உயிருக்கு மேல்"
-பாரதிதாசன்.

இறையனார் அருள் பெற்ற முத்த மொழி நம் தமிழ் மொழி. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சிறந்த இலக்கணம் வகுக்ககப்பட்டுள்ளது. உலகில் அழிந்து கொண்டிருக்கும் மொழிகளில் தமிழ்மொழியும் ஒன்று என்பது ஆய்வாளர்களின் கருத்தாக அமைந்துள்ளது. மெல்லத்தமிழ் இனிச் சாகும் என்று ஒரு பேதை உரைத் தான் என்றார் பாரதி. வள்ளுவர் வான் மறையும், கம்பன் கவிதைச் சிறப்பும், நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்னும் மணியாரமும் இருக்கும் வரை சாகாவரம் பெற்றது தமிழ் என்பது புரட்சி கவிஞனின் வாக்கு.

சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்! தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும். இத்தகைய நோக்குடன் 1974 ஆம் ஆண்டு தைத்திங்கள் யாழ்ப்பாணம் விழாக்கோலம் கண்டது. இளங்கோ இந்திரவிழா ஒன்றைக் காட்டினான். கரைகண்ட பூம்புகார் பட்டினம் மாவிலை தோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட எழிலையும் முத்தமிழின் நர்த்தனத்தையும் கரிகாற் பெருவளவனின் நல்லாட்சிச் சிறப்பையும் சிலம்பு கொண்டு பறை சாற்றினார் இளங்கோவடிகள். யாழ்ப்பாணமும் மகர தோரணங்களால்அலங்கரிக்கப்பட்டு இலக்கியக் காட்சிகளைக் காட்டும் சிகரங்கள் ஆங்காங்கே வைக்கப்பட்டு ஒவ்வொரு தமிழ் மகனும் உளப் பூர்வமாகப் பங்கேற்றுக்கொண்ட திருவிழாவாகப் பெருவிழா கண்டது நான்காம் தமிழாராய்ச்சி மாநாடு.



சென்னையிலே ஒரு மாநாடு. எறும்பு ஊர்ந்து வருவது போல் கார் ஊர்ந்து வரும் காட்சி. மரங்களிலே மந்திக் குரங்காட்டம் மக்கள் கூட்டம். கம்பனுக்கு ஒரு சிலை. வள்ளுவனுக்கு ஒரு சிலை. பேர் சிவல் போப்புக்கு ஒரு சிலை. நாவலருக்கு ஒரு சிலை. பாரதிக்கு ஒரு சிலை. சிலம்புச் செல்வியாம் கண்ணகிக்கும் ஒரு சிலை. இக்காட்சி இரண்டாம் தமிழாராய்ச்சி மாநாட்டை கண்டுகளித்த அறிஞர்களின் வர்ணனைக் காட்சிகளாகும்.

யாழ்ப்பாணத் தமிழாராய்ச்சி மாநாட்டில் அறிஞர்களின் ஆய்வரங்கம் வீரசிங்கம் மண்டபத்திலும், கலை நிகழ்வுகள் திறந்தவெளி அரங்க மேடையிலும் சிறப்பாக நடைபெற்றது. யாழ்ப்பாணத் தெருக்களில் திருவள்ளுவரும், ஔவையும், சோமசுந்தரப் புலவரும், பாரதியும் தோன்றிக் காட்சி கொடுத்தார்கள். நாவலரை மறந்தார்கள் நம்மவர்கள்.

தை 9 இறுதி நாள்விழா வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. மண்டபத்தை அசைக்கும் சனக் கூட்டம். விழா ஏற்பாட்டாளர்கள் இறுதி நிகழ்வை வீரசிங்கம் மண்டபத்தில் முன் முன்றலில் நிகழ்த்துவதற்கு ஒழுங்கு செய்தார்கள். சூரியன் மறைந்த நேரம் சென்னைப் பேறறிஞர் நயினார் முகமது பாரதியின் வரிகளை கேட்பவர்களின் குருதியை உறையச் செய்யும் பாணியில் ஆவேசப் பேச்சு நிகழ்ந்து கொண்டிருக்கிறது. மேடைக்கு முன்னாலிருந்த மின்சாரக் கம்பம் துப்பாக்கி வேட்டுக்களினால் அதிர்ந்தது. யாழ்ப்பாணத்தில் முதல் துப்பாக்கிச்சத்தம். மறுபக்கம் கண்ணீர்ப் புகைக் குண்டுகள். அன்றைய சிங்களப் பேரினவாத அரசு மொழியாராய்ச்சி மாநாட்டுக்குத் தந்த பரிசுகள் இவைதான்.

நீகல் படமாளிகை பலரது உயிரைக் காத்தது. மின்சாரம் தாக்கி ஒன்பது பேர் மாண்டனர். இளம் பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டார்கள். கண்போன போக்கில் மக்களின் கால்கள் போயின. புல்லுக்குளத்தில் புதையுண்டனர் சிலர். மாநாட்டின் இறுதியில் நிகழ்ந்துவிட்ட அவலங்களை வர்ணிப்பதற்கு வார்த்தைகள் இல்லை. தமிழ் இளைஞர்களின் நெஞ்சத்தை இந் நிகழ்வு கொழுந்து விட்டெரியும் நெருப்பாக்கியது. உரும்பிராய் சிவகுமாரன் போன்றவர்கள் உருவாகினார்கள். தமிழீழப் போராட்டத்தின் வித்தாக அமைந்த நிகழ்வு இதுவே ஆகும்.

வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்னால் காணப்படும் நினைவுத் தூண்கள் சொல்லிக்கொண்டிருக்கும் வரலாற்று உண்மையை இன்றைய இளைஞர்கள் இதயத் துடிப்பாக நினைவில் கொள்ள வேண்டும். நமது தமிழீழப் போராட்டத்தின் வித்து இந்நினைவுச் சின்னமே ஆகும். ஒவ்வொரு தமிழ் மகனும் அரசியல் வேறுபாடின்றி ஜனவரி 9 ஐ நினைவுகூர வேண்டும். பெரியவர்கள் இந்த நாளை, வரலாற்றை இளைஞர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும்.

ஆசிரியர்
இரா. செல்வவடிவேல்.

---

## மனித உரிமைகள் ஆணைக் குழு யாழ். அலுவலகத்தில்

# காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகள் நேற்று ஆரம்பமாயின

(யாழ்ப்பாணம்)

**நபர்கள் காணாமல் போனமை பற்றி மனித உரிமை ஆணைக்குழுவுக்குச் செய்யப்பட்ட முறைப்பாடுகளை விசாரிப்பதற்கென நியமிக்கப்பட்ட 3பேர் கொண்ட குழுவின் பணிப்புரைக்கமைய சம்பந்தப்பட்ட அலுவலர்கள் நேற்றுத் தொடக்கம் முதல் நிலை விசாரணைகளை யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் ஆரம்பித்துள்ளனர்.**


**பின்னர் எதிர்வரும் 24ஆம் திகதி முதல் குழு உறுப்பினர்கள் யாழ் வந்து முறையான விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளதுடன் குறித்த தினங்களில் விசாரிக்கப்படுபவர்களுக்கு அழைப்பாணைகள் அனுப்பப் படவுள்ளன.**

இது குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விரி வான அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையின் விபரம் வருமாறு:-

இலங்கையில் சமாதானம் ஏற்படுவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்கும் யாழ்ப்பாணப் பகுதியில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் விசேட முயற்சிகளை இலங்கை மனித உரிமை ஆணைக் குழு எடுத்து வருகின்றது.

இம் முயற்சிகளில் ஒரு அங்கமாக மனித உரிமை ஆணைக் குழுச்சட்டத்தின் 11 பி பிரிவின் கீழ் அப்பகுதியிலிருந்து 1990 ஆம் ஆண்டிலும் 1996 முதல் 1998 ஆம் ஆண்டு வரையான காலங்களிலும் நபர்கள் காணாமல் போனமை பற்றி மனித உரிமை ஆணைக்குழுவுக்கு செய்யப்பட்ட முறைப்பாடுகளை விசாரிப்பதற்கென மூன்று பேர்களைக் கொண்ட ஒரு குழு நியமிக்கப் பட்டுள்ளது.



விசாரணைக்குழுவுக்கு தலைமை தாங்கிவந்துள்ள கலாநிதி தேவ நேசன் நேசையா.

அக்குழுவின் தலைவராக முன்னைநாள் யாழ் அரச அதிபர் கலாநிதி தேவநேசன் நேசையாவும் மற்றும் திருகோணமலை அரச அதிபர் கே.எச்.கமிலஸ் பெர்ணன்டோ தென் கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் திருமதி ஜெசுமா இஸ்மாயில் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இக்குழு அதற்கென ஒரு செயலாளரை காலக்கிரமத்தில் தெரிவு செய்யவுள்ளது. அது வரையில் இவ்விசாரணைக்கான ஏற்பாடுகளைச் செய்யும் பொறுப்பினை மனித உரிமைகளை வலுப்படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்குமான செயல் திட்டத்தின் தேசிய ஒருங்கிணைப்பாள ராகிய எம்.சி.எம். இக்பால் ஏற்றுள்ளார்.

குறித்த குழுவிற்கு பின் வரும் விடயங்கள் சம்பந்தமாக விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

* மனித உரிமை ஆணைக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட 232 பேர் கொண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்ட நபர்கள் குறித்த காலத்தில் தன்னிச்சையின்றி அப்புறப்படுத்தப்பட்டுள்ளார்களா அல்லது அவர்களின் வதிவிடங்களிலிருந்து காணாமல் போயுள்ளார்களா என உறுதிப்படுத் துவது.
* தன்னிச்சையின்றி அப்புறப் படுத்தப்பட்ட அல்லது காணாமல் போனதாகக் கூறப்படும் நிகழ்வு நடைபெற்ற சந்தர்ப்பம் பற்றிய சகல விபரங்களை அறிந்து அறிவிப்பதும்,
* குறித்த வகையில் அப்புறப் படுத்தப்பட்ட அல்லது காணாமல் போனதாக கூறப்படும் நபர்களின் தற்போதைய நிலையும் அவர்கள் எங்கு இருக்கின்றார்கள் என்பது பற்றிய விபரம் அறிவது,
* காணாமல் போயுள்ள நபர் கள் இனம் காணப்படாத சிறைச்சாலைகளிலோ, தடுப்பு முகாம்களிலோ வைக்கப்பட்டுள்ளார்கள் என்ற முறைப்பாட்டுக்காரர்களின் கூற்று சம்பந்தமாக விபரம் அறிந்து அறிக்கை சமர்ப்பிப்பது,
* இவ்வகையில் காணாமல் போனவர்களை அவ்வகையில் காணாமல் போகச் செய்த நபர் அல்லது நபர்களை அடையாளம் கண்டு கொள்ளக் கூடிய ஏதுவான சாட்சியங்களும், அச்சாட்சியங்கள் பற்றி குழுவின் தீர்மானங்களை முன்வைப்பது,
* கடத்தப்பட்டோ அல்லது காணாமல் போனதாகக் கருதப்படும் நபர்களில் தங்கியிருந்தவர்கள், பெற்றோர் அல்லது கணவன் அல்லது மனைவி முதலியோருக்கு ஏதேனும் நிவாரணம் அளிக்கப்பட வேண்டுமாயின் அவை பற்றிய சிபார்சுகள் சமர்ப்பிப்பது,

இவ்விடயம் சம்பந்தமாக நடாத்தப்படும் விசாரணைகளின் பொழுது அவை வெளிப்படையாகவும் முறைப்பாட்டுக்காரர்களின் பங்களிப்புடன் தேடுதல் நடாத்தப்பட உள்ள துடன் அவ்வப்போது உரிய விபரங்கள் அவர்களுக்கு அறிவிக்கப் படவும் உள்ளது.

அத்துடன் இவ்விசாரணை களின் பொழுது முறைப்பாடு செய்த ஒருவர் மிகவும் துன்பகரமான நிலை யில் உள்ளார் என குழு காணுமே யாயின் அந்நிலையில் உள்ளவர்கள் குறிப்பாகப் பெண்கள், சிறுவர்கள் சம்பந்தமாக விசேட நிவாரணங்களுக்கான சிபார்சுகளை செய்யும்படி வேண்டப்பட்டுள்ளனர்.

மேலும் சாட்சிகளை வரவழைப்பதற்கும் சாட்சியங்களை ஏற்றுக் கொள்வதற்கும் தேவைப்படும் அதிகாரங்களையும் இக்குழுவின் அழைப்பாணைகளை ஏற்று நடவடிக் கைகளை எடுக்க தவறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு சட்டத்தினால் அளிக்கப்பட்ட அதிகாரங்கள் இக்குழுவுக்கும் அளிக்கப்பட்டுள்ளன. (உ-6)

வலி கிழக்குப் பிரதேசசபை, நீர்வேலி.

## மீள் கேள்வி அறிவித்தல் - 2003

**உரும்பிராய், கோப்பாய், அச்சுவேலி உப-அலுவலகக் கடைகளில் வியாபாரம் செய்யும் உரிமை.**

மேற்படி கடைகளிற்கு ஒரு மைல் சுற்றாடலில் எவ்விடத்திலும் மரக்கறி, மீன் வியாபாரம் செய்வது அனுமதிக்கப்படமாட்டாது என்பதை பொதுமக்களின் கவனத்திற்கு அறியத்தருகின்றேன்.

01. மேற்படி கடைகளில் வியாபாரம் செய்யும் உரிமைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து 21.01.2003 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினம் பிற்பகல் 2.00 மணியளவில் பரிசீலிக்கப்படும்.
02. கேள்விப் பத்திரங்கள் 20.01.2003 ஆம் திகதி பி.ப 2.00 மணிவரை கேள்விப் பத்திரக் கட்டணமாக ரூபா 150/= உம் மீளளிப்புச் செய்யப்படும். கேள்விவைப்புப் பணமாக ரூபா 2000/= உம் செலுத்தியவர்களுக்கே வழங்கப்படும்.
03. நிரப்பப்பட்ட கேள்விகள் குறிக்கப்பட்ட தினத்திற்கோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கக் கூடியதாக 'தலைவர்' வலி கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி என முகவரியிடப்பட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் 'கடைகளுக்கான கேள்வி' எனக் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அல்லது இச்சபையின் அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் போடப்படுதல் வேண்டும்.
04. கடைகளைத் தெரிவு செய்யும் முன்னுரிமை கூடிய கேள்வி அடிப்படையில் வழங்கப்படும்.
05. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் அவரது கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்ட பின் கடைகளைப் பொறுப்பேற்காது விடின் அவரது கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.
06. ஒருவர் ஒரு கேள்விக்கு மேல் சமர்ப்பிக்க முடியாது.
07. மேற்படிக் கடைகளில் கீழ்வரும் வியாபாரங்கள் செய்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.
   அ) தேநீர்க் கடை/சாப்பாட்டுக்கடை
   ஆ) மீன்/இறைச்சி/கருவாடு/மரக்கறிவகை/மதுபானம் .விற்பனை செய்தல்.
08. கேள்விகளை ஏற்றுக்கொள்வதோ, நிராகரிக்கவோ சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
09. ஒவ்வொரு கடையின் ஆகக்குறைந்த கேள்வித்தொகை பின்வருமாறு:-
   1. கோப்பாய் உப-அலுவலக கடைகள் ஒன்று 25,000/= (10 கடைகள்)
   2. உரும்பிராய் உப-அலுவலக கடைகள் ஒன்று 25,000/= (03 கடைகள்)
   3. அச்சுவேலி உப-அலுவலக கடைகள் ஒன்று 40,000/= (01 கடை)
10. இது சம்பந்தமான மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

பூ.குணசிங்கம்,
தலைவர்.

வலி கிழக்கு பிரதேசசபை,
தலைமை அலுவலகம்,
நீர்வேலி.
07.01.2003

(C-5611)

# பேரழிவு ஆயுதங்களை மறைத்தால் ஈராக் மீது குண்டு மழை பொழியும்

## அதிபர் புஷ் சதாமுக்கு மீண்டும் எச்சரிக்கை

(வாஷிங்டன்)

பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் ஈராக்கில் இருக்கிறதா? இல்லையா? என்பதை சதாம் ஹுசைன் உறுதியாகச் சொல்ல வேண்டும். இல்லை என்று சொன்னால் அதை ஏற்க மாட்டோம் என்று ஈராக் அதிபர் சதாம் ஹுசைனுக்கு அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பேரழிவை ஏற்படுத்தும் அணு ஆயுதம் இரசாயன மற்றும் உயிரியியல் ஆயுதம் ஆகியவற்றை ஈராக் வைத்திருக்கிறது என்று அமெரிக்கா குற்றம் சாட்டி வருகிறது. ஆனால் தங்களிடம் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் இல்லை என்று ஈராக் கூறி வருகிறது. வேண்டுமானால் தங்கள் நாட்டில் ஆயுதச் சோதனை நடத்தி அது போன்ற ஆயுதங்கள் இருக்கிறதா? இல்லையா? என்பதை பார்த்துக் கொள்ளலாம் என்று அமெரிக்காவுக்கு ஈராக் பதில் கூறியது.

ஈராக்கில் சர்வதேச ஆயுதச் சோதனையாளர்களை அனுப்பி சோதித்துப் பார்க்கலாம் என்ற முடிவுக்கு வந்த அமெரிக்கா இது தொடர்பாக ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்தது.

இந்தத் தீர்மானத்திற்கு இணக்கம் தெரிவித்த ஈராக் சர்வதேச ஆயுதச் சோதனையாளர்களை தங்கள் நாட்டிற்குள் அனுமதிக்க சம்மதம் தெரிவித்தது. அதன்படி ஐக்கிய நாடுகள சபையின் சார்பில் சர்வதேச ஆயுதச் சோதனையாளர்களின் குழு கடந்த மாதம் ஈராக் சென்றது.

இந்தக் குழுவினர் இன்னமும் ஈராக்கில் ஆயுதச் சோதனைகளை நடத்தி வருகின்றனர். இந்தச் சர்வதேச ஆயுதச் சோதனையாளர்கள் 'சோதனை' செய்ய வரவில்லை. 'உளவு வேலை' பார்க்கவே வந்துள்ளனர் என்று ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் அண்மையில் குற்றம் சாட்டியிருந்தார்.

இதற்கு அமெரிக்க அதிபர் புஷ் கடும் எச்சரிக்கை விடுத்திருந்தார். ஆயுதச் சோதனையாளர்கள் சோதனை நடத்த ஒழுங்காக ஒத்துழைக்க வேண்டும். இல்லையென்றால் குண்டு மழைதான் பொழியும் என்று புஷ் எச்சரித்திருந்தார்.

இந்த நிலையில் அதிபர் சதாம் ஹுசைனுக்கு அதிபர் ஜோர்ஜ் புஷ் மீண்டும் ஒரு எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் ஈராக்கிடம் உள்ளன. ஆனால் அதை சதாம்ஹுசைன் மறைக்கிறார். பேரழிவு ஆயுதங்கள் இருக்கிறதா? இல்லையா? என்பதை சதாம் உறுதியாகக் கூறிவிடவேண்டும். இல்லை என்று மட்டும் சொல்லக் கூடாது. இல்லை என்று சதாம் கூறினாலோ, அல்லது இதே கருத்தை சர்வதேச ஆயுதச் சோதனையாளர்கள் கூறினாலோ ஈராக்கை நாங்கள் தாக்குவது நிச்சயம் என்று புஷ் எச்சரித்துள்ளார்.

பேரழிவு ஆயுதங்களை அழித்துவிடு என்று அமெரிக்கா மட்டும் சொல்லவில்லை. இந்த உலகத்தில உள்ள அனைத்து நாடுகளுமே இதையேதான் வலியுறுத்துகின்றன. இதற்காகவாவது சதாம் ஹுசைன் உண்மையைச் சொல்லிவிட வேண்டும். அப்படிப்பட்ட ஆயுதங்களை அழித்துவிட்டு இந்தப் பிரச்சினைக்கு சதாம் முற்றுப்புள்ளி வைத்து உலகில் அன்பையும், அமைதியையும் கடைப்பிடிக்க வேண்டும். அதுதான் சதாம ஹுசைனின் கடமையும் ஆகும் என்றும் புஷ் கூறியுள்ளார்.

உண்மையைக் கூறாமல் பேரழிவு ஆயுதங்களை மறைத்தால் பின்பு இராணுவ நடவடிக்கைதான். இதில் எந்தவித சந்தேகமும் இல்லை என்றும் புஷ் எச்சரித்துள்ளார்.

சதாம் ஹுசைனிடம் பேரழிவு ஆயுதங்கள் இருக்கிறது. அதில் சந்தேகமில்லை. எனவே உலக நாடுகள் என்ன சொல்கிறதோ அதை சதாம் ஹுசைன் கேட்க வேண்டும். அதுவரை நமது நிர்ப்பந்தமும் நீடிக்கும் என்றும் மேலும் கூறினார்.

அமெரிக்கா மக்களுக்கும் மத்திய கிழக்கிலுள்ள ஈராக்கின் அண்டை நாட்டு மக்களுக்கும் சதாம் ஹுசைன் ஒரு அச்சுறுத்தலாக இருக்கிறார். பேரழிவு ஆயுதங்களை வைத்திருக்கும் சதாம் அமைதியின் நிமித்தமாக அந்த ஆயுதங்களை அழித்துவிடவேண்டும் என்று புஷ் அறிவுரையாகவும் எச்சரிக்கையாகவும் கூறியுள்ளார். (பி)

### பலஸ்தீன மாநாட்டை குழப்பவேண்டாம்

(லண்டன்)

லண்டனில் நடைபெறவுள்ள பலஸ்தீனர்களுக்கான மாநாட்டிற்கு இடையூறு விளைவிக்க வேண்டாமென பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் இஸ்ரேலைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

பலஸ்தீனர்களுக்கான மாநாட்டை நடத்துவதற்கான ஏற்பாட்டைத் தொடர்ந்தும் பிரிட்டன் மேற்கொண்டு வருவதாக பிரிட்டன் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.


இஸ்ரேலில் இடம்பெற்றுள்ள தற்கொலைத் தாக்குதலில் 22பேர் கொல்லப்பட்டதையடுத்துப் பலஸ்தீனர் மாநாட்டை தடுக்கும் நடவடிக்கைகளை இஸ்ரேல் மேற்கொள்ள ஆரம்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது.(பி-2)

### விமானிகளற்ற உளவு விமானம்

(டோக்கியோ)

விமானிகளற்ற உளவுத்துறை விமானங்களைத் தயாரிக்கும் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த ஜப்பானின் பாதுகாப்பு நிறுவனம் ஆலோசனை நடத்திவருகின்றது.

சந்தேகத்துக்குரிய கப்பல்கள் மற்றும் ஏனைய நாடுகளின் இராணுவத்தினரது சந்தேகத்துக்கிடமான நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கே இந்த உளவுத்துறை விமானங்களைத் தயாரிக்கவுள்ளதாக அந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.



அமெரிக்காவில் லாஸ் வேகாஸில் நடைபெறும் சர்வதேச நுகர்வோர் மின்னணுக் கருவிகள் கண்காட்சியில் இடம்பெற்றுள்ள சொனி நிறுவனததின் மினி வீடியோப் பிளேயர்.

### உலகில் அதி உயரக் கட்டடம்

(சியோல்)

உலகிலே அதி உயரமான கட்டடம் ஒன்றை நிர்மானிப்பதற்குத் தென்கொரியா திட்டமிட்டுள்ளது. இதற்கான பூர்வாங்க ஒப்பந்தம் மிக விரைவில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

2007ஆம் ஆண்டு பூர்த்தியாகவுள்ள இக்கட்டடம் 110 மாடிகளைக் கொண்டதாக விளங்குமெனவும் பல்வேறு வசதிகளைக் கொண்ட சர்வதேச வர்த்தக நிலையமாக இருக்குமெனவும் கூறப்படுகிறது. (பி.2)



சதாம்ஹுசைன் தனது மகனிடமும், ராணுவ அதிகாரிகளிடமும் பக்தாத்தில் ஆலோசனை நடத்துவதனைக் காணலாம்.

# பாக்.அதிபருக்கு அணு குண்டுவீசும் அதிகாரம்

(இஸ்லாமபாத்)

அணுகுண்டு வீசும் அதிகாரம் பிரதமர் வாஜ்பாய்க்கு தரப்பட்டுள்ளது என்று இந்தியா அறிவித்த சில நாட்களிலேயே பாகிஸ்தானும் அணுகுண்டு வீசும் அதிகாரம் முஷாரப்புக்குக் கொடுக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

கடந்த வாரம் பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் ஒரு நிகழ்ச்சியில் பேசிய போது இந்தியா மீது அணுக்குண்டு வீசத் தயாராக இருந்தோம் என்று கூறியிருந்தார்.

அதன் பிறகு சில நாள் கழித்து இந்திய அரசு ஒரு முக்கிய முடிவை எடுத்தது. அதன்படி இந்தியா மீது எந்த நாடாவது முதலில் அணு குண்டு வீசினாலோ அல்லது உயிரியியல் ஆயுதத்தை வீசினாலோ அந்நாட்டின் மீது அணுகுண்டு வீசும் அதிகாரம் பிரதமர் வாஜ்பாயிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று மத்திய அரசு அறிவித்திருந்தது.

இப்பொழுது பாகிஸ்தானில் அணு குண்டு வீசும் முடிவை எடுக்கத் தேசிய கட்டளை ஆணையம் என்ற ஒரு அமைப்பைப் பாகிஸ்தான் அரசு உருவாக்கியுள்ளது. இந்த ஆணையத்திற்கு பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்தான் தலைவர். இந்த ஆணையத்தின் உறுப்பினர்களாக பாகிஸ்தான் பிரதமர் சவருலால் ஹான் ஜமாலி, வெளியுறவுத் துறை அமைச்சர் ரசீத் முகம்மது கசூரி ஆகியோர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். (பி)

### புதிய அமைச்சர்

(பக்தாத்)

ஈராக்கின் எண்ணெய்வள அமைச்சராக சமீர் அப்துல் அசீஸ் அல் நஜீம் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சர் அமீர் மொகமட் ரசீத்திற்குப் பதிலாகவே இவரை ஜனாதிபதிசதாம் ஹுசைன் நியமித்துள்ளார்.

ஈராக்மீது அமெரிக்கா போர் தொடுக்கலாம் என்பதைக் கருத்தில் கொண்டே சதாம் ஹுசைன் இம்முடிவை எடுத்துள்ளார் எனக் கூறப்படுகிறது (பி.2)

# 6 வயது தம்பியை சுட்டுக் கொன்ற 7 வயது சிறுமி

(ஒன்ராறியோ)

7 வயதுச் சிறுமி ஒருவர் தனது 6வயதுத் தம்பியை கைத்துப்பாக்கியொன்றினால் சுட்டுக்கொன்றுள்ளார். இது தொடர்பாக அச்சிறுமியின் அண்ணனான கனேடியர் கவனயீனமாக இருந்து சிறுவனின் கொலைக்குக் காரணமாகியுள்ளார் என நீதிமன்றில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

இச்சிறுவர்கள் இருவரும் வீட்டில் கட்டிலில் இருந்து விளையாடிக் கொண்டிருந்துள்ளனர். அச்சமயம் கைத்துப்பாக்கியொன்று கையில் கிடைத்துள்ளது. துப்பாக்கியை தம்பியின் பக்கம் நீட்டிய சிறுமி அவனது தலையில் சுட்டிருக்கிறார். பையன் ஆஸ்பத்திரியில் மரணமானான்.

சிறுமியின் அண்ணன் 22வயதான நபர் கவனயீனமாக இருந்துள்ளார் என்பதுடன் சட்டவிரோதமாக கைத்துப்பாக்கியை வைத்திருந்தார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார். (பி)

# புஷ்ஷின் பொருளாதார திட்டம் அர்த்தமற்றது

## யு.எஸ் எதிர்க்கட்சிகள்

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 674 மில்லியன் டொலர் பொருளாதாரத்திட்டம் அர்த்தமற்றதென அமெரிக்க செனற் சபையைச் சேர்ந்த ஜனநாயகப் பிரதிநிதிகள் கூறியுள்ளனர்.

இத்திட்டத்தினால் வரவு செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகைகள் வரிகள், என்பன அதிகரிக்கப்படுவதுடன் பொருளாதார வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான நன்மைகள் கிடைக்கப் போவதில்லையென அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அமெரிக்காவின் வரலாற்றில் இத்தகைய பொருளாதாரத் திட்டம் ஒன்றை இதற்கு முன் எப்போதும் அறிந்திருக்கவில்லையெனவும் இது மிகவும் மோசமான பொருளாதாரத் திட்டம் எனவும் செனற்சபையின் வரவு செலவுத்திட்டச் செயற்குழு உறுப்பினர் ஒருவர் குறைகூறியுள்ளார். (பி-2)


உலக தரிசனம்

### பதவி விலக வலியுறுத்தி காஷ்மீரில் சுவரொட்டிகள்

(புதுடில்லி)

இந்திய அதிகாரத்திற்குட்பட்ட காஷ்மீரிலுள்ள முஸ்லிம் போராளிகள் கயூரி மாவட்டத்திலுள்ள பெண் பொலிஸாரை உடனடியாகப் பணியிலிருந்து விலகுமாறு காஷ்மீரப்பகுதியில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

பதினான்கு வயதிற்கு மேற்பட்ட சிறுமிகள் பாடசாலைக்குச் செல்லக் கூடாது இவர்கள் வீட்டுக்கு வெளியே செல்லும் போது முக்காடு அணிய வேண்டுமெனவும் வெளியே செல்லும் போது ஆண் உறவினர் ஒருவர் சிறுமியுடன் செல்ல வேண்டும் என்றும் அந்தச் சுவரொட்டியில் மேலும் எழுதப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (பி-2)



அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் பதிலடி கொடுக்கத் தயாராக உள்ளதாக ஈராக் வெளியுறவுத் துறை அமைச்சர் நாசி சாப்ரி தெரிவித்துள்ளார். அருகில் ஈராக் ராணுவப் படைவீரர் அணிவகுத்துநிற்கும் காட்சி.

# முஸ்லிம்களின் கோரிக்கை நிறைவேறாதவிடத்து நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படாது

## எச்சரிக்கும் தொனியில் அதாவுல்லா

(கொழும்பு)

முஸ்லிம் மக்கள் தமது பாதுகாப்பின் பொருட்டே கிழக்கில் தனியான அலகொன்றை கோருகின்றனர் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாற்றுக்கட்சித் தலைவரும் அமைச்சருமான அதாவுல்லா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்ட அதாவுல்லா மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு கிழக்கு மாகாணங்கள் இரண்டும் சமஷ்டி ஆட்சி முறையின் கீழ் ஒன்றாக இணைக்கப்படுமானால், கிழக்கில் முஸ்லிம்களுக்கென தனி அலகு ஒன்று தேவை.

இவ்வாறு முஸ்லிம் மக்களுக்கென கிழக்கில் தனி அலகு ஒன்று வந்த பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளைப் போன்று முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக்காக வேறான பொலிஸ் பிரிவு ஒன்றை அமைக்க முடியும்.

வடக்கு-கிழக்குப் பகுதிகளின் பெரும்பான்மையாக வாழும் தமிழ் மக்களுக்கு முஸ்லிம் சமூகம் உட்பட ஏனைய சமூகங்களை ஆளுகின்ற சந்தர்ப்பத்தை அரசு ஏற்படுத்திக் கொடுக்கக் கூடாது.

மாறாக, இவ்வாறான தொரு நிலைமை ஏற்பட்டால் நாட்டில் நிரந்தர சமாதானம் நிலவ வாய்ப்பு ஏற்படாது எனத் தெரிவித்துள்ளார். (உ-8)

### திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் திருவாசக முற்றோதல் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. (உ)

### இடமாற்றம்

(சண்டிலிப்பாய்)

யா-செல். ஆன்ஸ் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் இதுவரை காலமும் அதிபராகக் கடமையாற்றிய அருட்சகோதரி தஸ்நெவிஸ் லஸ்லிஸ் இம் மாதம் 6 ஆம் திகதி முதல் திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலைக்கு இடம் மாற்றப்பட்டுள்ளார். (உ-256)

# ஆசிரியர் மாணவர்கள் இணைந்து கல்வி விழிப்புணர்வுப் பிரசாரம்

(சண்டிலிப்பாய்)

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் முறைசாராக்கல்விப் பிரிவின் அனுசரணையுடன் கல்வி விழிப்புணர்வுப் பிரசாரத் திட்டம் ஒன்றினை கீரிமலை நகுலேஸ்வராக் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்து ஆரம்பித்துள்ளனர்.

'நமது நாட்டு மக்கள் ஒவ்வொருரினதும் அடிப்படை உரிமை கல்வி' என்பதை தொனிப்பொருளாகக் கொண்டு, நேற்று முதல் முன் மாதிரியான இந்த நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

இதன்கீழ் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வீதி நாடகங்கள் மற்றும் இசை நிகழ்ச்சிகள், விழிப்புணர்வு உரைகள் என்பன இடம்பெற்று வருகின்றன.

சிறுவர்களின் கல்வி உரிமையை வலியுறுத்தும் பிரசாரத் தட்டிகள் தாங்கிய ஊர்திப் பவனியும் இதில் அடங்கும். (உ-258)

## மனைவியைத் தேடித் தருமாறு

# ம. உ. ஆ. குழுவில் கணவன் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

தனது மனைவியைத் தேடிக் கண்டுபிடித்து தன்னிடம் ஒப்படைக்குமாறு கோரி நபர் ஒருவர் யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அனலை தீவு 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான யேசுதாசன் என்பவரே நேற்றைய தினம் இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

அவரது முறைப்பாட்டில், 1988 ஆம் ஆண்டு லெப்னான் நாட்டுக்கு வேலை வாய்ப்புப் பெற்றுச் சென்ற மனைவி பற்றி இதுவரை எந்தவிதத்தவலும் அறிய முடியவில்லை எனவும் கடந்த 15 வருடங்களாக மனைவியைத் தேடிக் கண்டு பிடிக்கும் தனது முயற்சி பயனளிக்கவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-16,6)

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து பொருட்கள் கொண்டு வரும் சகல வர்த்தகர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 30 மணிக்கு யாழ். வணிகர் கழகப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் சகல வர்த்தகர்களையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது (உ)

# பாராளுமன்ற கட்டடத்தில் அடிக்கடி பவர் கட்

(கொழும்பு)

பாராளுமன்றம் நேற்றுக் காலை கூடிய போது 8 தடவை மின்தடங்கள் ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் சந்திரராஜகருணா கேட்டுக் கொண்டதற்கிணங்க, இத்தடங்கல் தொடர்பாக விசாரணை நடத்தப்படும் என சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தை நவீனப் படுத்தும் நடவடிக்கைக்கென 5 கோடி ரூபா நிதி செலவிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. (உ-8)

# போக்குவரத்து திணைக்கள பணிகளில் பிரதேச செயலகங்கள் பங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் இனி வரும் காலங்களில் பிரதேச செயலகங்களுடன் இணைந்து செயற்படவுள்ளது.

பொதுமக்களின் நன்மை கருதி, திணைக்களப் பணிகளை விரைந்து முன்னெடுக்கும் விதமாக இப்புதிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-6)

# விசாரணைக்கு உகந்ததாக 59 முறைப்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் கடந்த 1996, 1997 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் கைதாகி காணாமல் போனோர் தொடர்பில் 59 பேர் மீதான விசாரணைகளை மட்டுமே உடனடியாக நடத்தக்கூடிய நிலையில் உள்ளது.

கைதாகி காணாமல்போனோர் தொடர்பான விசாரணைகளை நடத்தவென யாழ்ப்பாணம் வந்துள்ள விசாரணைக்குழுவின் தலைவரான தேவநேசன் நேசையா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். குடாநாட்டில் கைதாகி காணாமல் போனோர் தொடர்பாக 232 முறைப்பாடுகள் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கிடைத்துள்ளன.

இவற்றில் விசாரணைகளை மேற்கொள்ளக் கூடிய விதத்தில் பூரணவிபரங்கள் மற்றும் ஆவணங்களுடன் 59 முறைப்பாடுகளே செய்யப்பட்டுள்ளன

இதனால் ஏனைய 173 முறைப்பாடுகள் குறித்த விசாரணைகளை உடனடியாக ஆரம்பிக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பூரண விபரங்களைப் பெற்றுக் கொள்ளும் விதத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கு தற்போது கடிதம் மூலம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றார். (உ-6)

# சுகாதார சேவைகளுக்கு 800 மில்லியன் ஒதுக்கு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் மற்றும் புனர்வாழ்வுபுனரமைப்பு பணிகளுக்கென 800 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் குமாரவேற்பிள்ளை தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு உலகவங்கி வழங்கியுள்ள விசேட கொடுப்பனவுக்கு அமைவாகவே இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய யாழ்ப்பாணம் முல்லைத்தீவு. கிளிநொச்சி, மன்னார் திருகோணமலை. மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கு தலா 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் முதற் கட்டநடவடிக்கையாக தலா 40 மில்லியன் ரூபா ஒவ்வொரு மாவட்டத்துக்கும் வழங்கப்படவுள்ளது.

மாவட்டங்களில் சுகாதார நடவடிக்கைகளுடன் தொடர்புடைய கட்டடங்களின் புனரமைப்பு மற்றும் கட்டுமானப் பணிகளுக்கு 30 மில்லியன் ரூபாவும், மருத்துவப்பொருள்கள் அத்தியாவசிய மருத்துவ உபகரணக் கொள்வனவு மற்றும் அம்புலன்ஸ் வசதிகளுக்கென 10 மில்லியன் ரூபாவும் செலவிடப்படவுள்ளது. (உ-8)

# இன்றைய தமிழகத்தின் பக்தி நிலை சினிமாவால் சீரழிந்து போயுள்ளது

## கவிக்கோ அப்துல் ரகுமான் கவலை

(தென்மராட்சி)

தமிழகத்தில் பக்திமுறை மாறிவிட்டது. நடிகைக்குக் கோயில் கட்டுகின்றவர்கள் வாழ்கின்ற தமிழகத்தை எப்படி நினைத்துப்பார்க்க முடியும். தமிழன் இப்போது தமிழ்நாட்டில் வாழமுடியாத நிலையே காணப்படுகின்றது.

இவ்வாறு தமிழகத்தின் பிரபல கவிஞரான கவிக்கோ அப்துல் ரகுமான் நேற்றைய தினம் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெற்ற சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 78 வது பிறந்த நாள் அறநிதிய விழாவின் இரண்டாம் நாள் விழாவில் பங்குகொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

இவ்விழாவின் ஆரம்பத்தில் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி முன்னுரையை நிகழ்த்தினார்.

அகில இலங்கைக் கம்பன் கழக அமைப்பாளர் கம்பவாரிதி இ. ஜெயராஜ் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தீவக கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்.

கவிக்கோ அப்துல் ரகுமான் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது;

மொழியை இறைவனாகப் பார்க்கின்ற பண்பு தமிழனுக்குஉண்டு. தமிழ் நாட்டில் இன்று தமிழனின் கலாசாரப் பண்பாட்டு விழுமியங்கள் யாவும் எங்கோ தொலைந்து போய் விட்டன. தமிழ்மொழியின் தொன்மையையும்பேணுபவர்களின் தொகை குறைந்து வருகின்றது.

ஆலயங்களில் தமிழ் மொழியில் வழிபாடு செய்வது தான் சிறந்தது. மூடக் கொள்கைகளில் இருந்து நாம் எம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும். மூடக் கொள்கைகளுக்கும் முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்.

தமிழ் நாட்டில் தாய்மொழியான தமிழ்மொழியில் கல்வி போதிக்கக் கூடாது என்று கோரி நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்கின்றவர்கள் இருக்கின்றனர்

அத்துடன், சினிமாவின் ஆக்கிரமிப்பு தமிழகத்தை வெகுவாகப் பாதித்துள்ளது நல்லொழுக்கம் இல்லாதவர்களால் எழுதப்பட்டு, பாடப்படுகின்ற ஆபாசமிக்க சினிமாப்பாடல்கள் எமது ஆலயங்களில் ஒலி பரப்பப்படுகின்றன. இதன் மூலம் தானா நாம் எமது இறைபக்தியை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பது பற்றிச் சிந்திக்க வேண்டிய காலகட்டத்தில் இருக்கின்றோம்.

யாழ்ப்பாணத்தில் தமிழ் மொழி வாழ்கின்றமையையும், வளர்க்கப்படுவதையும் பார்கின்ற போது திருப்தியாக இருக்கின்றது எனக் குறிப்பிட்டார்.

கம்பவாரிதி, இ.ஜெயராஜ் தனது தலைமையுரையில்;

இருபது ஆண்டுகளுக்கு மேலாக இந்தப் பிரதேசத்தில் இடம் பெற்ற யுத்தத்தினால் நாம் பலவற்றை இழந்து விட்டோம். இழப்பு என்பது உயிரிழப்பு, பொருளிழப்பு மட்டும் என நான் சொல்லவில்லை. நம்முடைய வாழ்வும் மறைந்து போய் விட்டது.

நாட்டில் போர்ச் சூழல் மறைந்து ஒரு அமைதி ஏற்பட்டு விட்டால் கூட, பழைய யாழ்ப்பாணம் திரும்பி வருமா? அது சந்தேகம் தான். நம் ஊரில் இருந்த பண்பாடு கலாசாரம், மண் வாசனை எல்லாம் எங்கோ தொலைந்து போய் விட்டன.

போரினால் நமக்கு ஏற்பட்டது பேரிழப்பு. கட்டடங்களைக் கட்டி எழுப்பலாம் நாம் இழந்து விட்ட பொருள்களை ஏதோ ஒரு விதத்தில் பெற்றுக் கொள்ளலாம் ஆனால் இழந்த பண்பாட்டை யார் மீட்டுத்தரப் போகின்றார்கள்? சிதைந்து போயுள்ள எமது வாழ்வு முற்றாகச் சீராகுமா?.

எமது மண்ணை இதுவரை போரில் இருந்து காப்பாற்றி விட்டோம் இனி நம்மவர்களிடம்இருந்து காப்பாற்றவேண்டும்பண்பாட்டுச் சீரழிவை நிறுத்த வேண்டும் நமது உறுதியான தெளிவான இருப்புத்தான் எம்மை சீரழிவுகளில் இருந்து காப்பாற்றப் போகின்றது.

இதுவரை காலமும் எமக்கு தோல்வி என்பதே இல்லை. ஆனால் இனித்தான் இனிமேல் நாம் மிக அவதானமாக இருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

நேற்றைய விழாவில், தீவகப் பகுதியைச் சேர்ந்த 150 பாடசாலை மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் கொள்வனவுக்கான நிதியுதவி வழங்கப்பட்டது.

(உ-77)

### சமுர்த்தி வங்கிச் சங்கம்

(காரைநகர்)

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் இரண்டாவது சமுர்த்தி வங்கிச்சங்கம் அமைப்பும் வங்கிக் கட்டுப்பாட்டுச்சபைத் தெரிவும் இன்று மு.ப. 11.00 மணிக்கு காரைநகர் சைவமகாசபைகட்டடத்தில்இடம்பெறவுள்ளது.

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் ஜே எக்ஸ் செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் அனைத்து சமுர்த்திச்சங்க உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-246)

# கண்ணிவெடி அபாயத்தில் இருந்து யாழ். மக்களைக் காப்பது எமது கடமை

## ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

யாழ் மக்களை கண்ணி வெடி அபாயத்தில் இருந்து உடனடியாக காப்பாற்ற வேண்டியது இன்றைய முக்கிய தேவையும் எமது கடமையுமாகும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் திருமதி யோரிகோ கவாகுச்சி.

யாழ் குடாநாட்டில் கண்ணி வெடி அகற்றும் பணியை ஹலோ த்ரஸ்ட், மெக், என் பி ஏ, ஆகிய மூன்று அரசசார்பற்ற நிறுவனங்களும் பொறுப்பேற்று நடைமுறைப்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் வைபவம் நடந்த திங்கட்கிழமை கொழும்பு ஹில்டன் ஹொட்டலில் நடைபெற்றசமயம் அதில் கலந்து கொண்ட கவாகுச்சி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;

வடக்கு-கிழக்கில் உடனடி மனிதாபிமான உதவி நடவடிக்கைகளுக்கும் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்கும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் ஜப்பானிய அரசாங்கம் 1.25 மில்லியன் அமெரிக்க டொலர்களை உதவியாக வழங்கும்.

உள் நாட்டில் இடம் பெயர்ந்து வாழும் மக்களை பாதுகாப்பாக தமது பிரதேசங்களில் மீளக்குடியமர்த்துவதற்கு ஜப்பானிய அரசாங்கத்தின் இந்த உதவி பெரிதும் பயனளிக்கும்.

அத்துடன், ஜப்பானிய அரசாங்கம் இத்தகைய தொரு உதவியைவழங்குவதில்மிகுந்த மகிழ்ச்சி கொள்கிறது என்றார்.

இந்நிகழ்வில் புனர்வாழ்வு, புனரமைப்பு மீள்குடியேற்ற அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையில், யாழ்ப்பாண குடாநாடு மற்றும் சாவகச்சேரிப் பகுதிகளைப் பார்த்தால் அழிந்து போன ஹிரோஷிமாவைப் போல் காட்சி அளிக்கிறது.

25 வருடங்களாக தமிழ் மக்கள் பெரும் துயரங்களை அனுபவித்து வருகின்றார்கள் இந் நிலையில், இவர்களின் நல்வாழ்விற்காக ஜப்பான் வழங்கும் உதவி முக்கியத்துவம் வாய்ந்தது.

சமாதானக் காற்றை இந்நாடு சுவாசிக்கும் இத்தருணத்தில் இந் நாட்டின் எதிர்கால சபீட்சத்திற்காக ஜப்பான் மேலும் உதவும் என்ற நம்பிக்கையை எமக்கு அளிக்கிறது; என்றார்.

இதேவேளை, கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் திருமதி யோரிகோ கவாகுச்சி, அரியாலை மற்றும் தென்மராட்சிப்பகுதிகளுக்குச் சென்று கண்ணி வெடி அகற்றும் பணிகளை பார்வையிட்டுள்ளதுடன், தற்போது யாழ்ப்பாணத்தில் தனது சேவையினை ஆரம்பித்துள்ள கண்ணி வெடி அகற்றும் நிறுவனமான ஹலோ ட்ரஸ்ட் நிறுவன அதிகாரிகளுடனும் கலந்துரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது; (உ-10)

# தலைவர் பிரபா வழிநடத்தலில் வடகிழக்கில் மர நடுகைத் திட்டம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு தமிழ்ப் பிரதேசங்களில் 8 இலட்சம் மரக்கன்றுகளை நடுகை செய்யும் திட்டம் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் பணிப்பின் பேரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பினை கருத்தில் கொண்டே இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இம் மர நடுகைத் திட்டத்தினை புலிகளின் வனவளப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். இத்திட்டத்தின் கீழ் தேக்கு மரங்கள் கூடுதலாக நாட்டப் பட்டு வருகின்றன.

வடக்கு கிழக்கு பிரதேசங்களில் கடந்த காலத்தில் ஏற்பட்ட போர் காரணமாக பயன்தருமரங்கள் அழிக்கப்பட்டன

இவற்றினை நிவர்த்தி செய்து சூழலைப் பாதுகாத்துக் கொள்ளும் நோக்குடனே தலைவர் பிரபாகரன் இந் நடவடிக்கையை எடுத்துள்ளார்; (உ-8)

வலி வடக்கு மீள் குடியமர்வு விவகாரம்

# கூட்டமைப்பு எம். பிக்கள் பிரதமரைச் சந்தித்து பேசுவர்

(யாழ்ப்பாணம்)

வலி-வடக்கு அதிஉயர்பாதுகாப்புவலய மீள் குடியேற்றம் தொடர்பாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவை விரைவில் சந்தித்துப் பேசவுள்ளனர்

இதுபற்றி கருத்துவெளியிட்டயாழ் மாவட்டபாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா;

வலி- வடக்கு பகுதிமக்கள் தொடர்ந்தும் முகம்கொடுக்கும் பல்வேறு பிரச்சினைகளை எடுத்துக்கூறிவிரைவாக இதற்கான தீர்வொன்றைப் பெற்றுக் கொடுக்கும் வகையிலேயே இப்பேச்சுவார்த்தை அமையும் என்றார்.

இதேவேளை. தம்மை சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துமாறு கோரி கடந்த வெள்ளிக்கிழமை முதல் வலி வடக்கு மக்கள், வலி வடக்கு பிரதேச செயலகம் முன்பாக மறியல் மற்றும் உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்தி வருவது தெரிந்ததே.

தாய்லாந்தில் நடைபெற்றுவரும் 4 ஆம்கட்டப்பேச்சுவார்த்தையின் போது உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியமர்த்துவது பற்றிய பொது இணக்கப்பாட்டிற்கு இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப்புலிகளும் வந்துள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன்பாலசிங்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது; (உ-10)

# நோர்வே தூதுவரின் இடமாற்றம் ஏப்ரல் மாதம் வரை ஒத்திவைப்பு

## விடார் ஹெல்கீசன் உறுதிப்படுத்துகை

(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் ஏப்ரல் மாதம் வரை தமது பணியினை தொடர்ந்து மேற்கொள்வார் என நோர்வே தூதரகம் அறிவித்துள்ளது

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே தற்போது நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளில் முக்கியமான விடயங்கள் தற்போது பேசப்பட்டு வருகின்றன;

இப்பேச்சுவார்த்தைகளில் அவரது பங்களிப்புகள் முக்கியம் பெறுவதனால், இடமாற்றம் தாமதிக்கப்பட்டுள்ளதாகவும் தூதரகம் அறிவித்துள்ளது;

இருதரப்புக்கும் இடையேயான யுத்த நிறுத்த உடன்படிக்கை, மற்றும் சமாதானப் பேச்சுவார்த்தை ஆகியவற்றில் முக்கிய பங்காற்றி வரும் நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எவ்வெம். வானொலிக் கருவிகளை இறக்குமதி செய்து கொடுத்தார் என்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு பலத்த கண்டனங்களுக்கு உள்ளாகி இருந்தார்.

அவரது இடமாற்றத்துக்கும், இக்குற்றச்சாட்டுக்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் தெரிவித்துள்ளார்;

சமாதான முயற்சிகள் கடந்த வருடம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரே அதாவது 2001 ஆம் ஆண்டிலேயே நோர்வே சட்ட திட்டங்களுக்கு அமைய நோர்வே தூதுவரின் இடமாற்றம் குறித்து முடிவு எடுக்கப்பட்டதாக ஹெல்கீஷன் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்; (உ-8)

## சைவப்பிரகாச வித்தியாசாலை சொந்த இடத்தில்

(ஆனைக்கோட்டை)

வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை கடந்த 10 வருடங்களின் பின்னர் மீண்டும் சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது;

இப்பாடசாலைக் கட்டடம் முன்னர் கடற்படை முகாமாக இயங்கிய காரணத்தினால் வேலணை சரஸ்வதி வித்தியாசாலையில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது; (உ-201)

## கசிப்பு விற்பனை இருவருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

சட்ட விரோதமான முறையில் கசிப்பு விற்பனை செய்த இருவருக்கு யாழ் மாவட்ட நீதிமன்றம் 24 ஆயிரம் ரூபா குற்றப்பணமாக செலுத்துமாறு உத்தரவிட்டது

கொக்குவிலைச் சேர்ந்த வேலன் நாகேந்திரனுக்கும், புகையிரத வீதியைச் சேர்ந்த மாரிமண்டு பூரணம் என்பவருக்குமே குற்றப்பணம் செலுத்துமாறு நீதவான் இ. த. விக்னராசா உத்தரவிட்டுள்ளார்; (பி-6)

## மலேசிய திட்ட வல்லுநர் இன்று யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

மலேசியாவைச் சேர்ந்த புனர்வாழ்வுத் திட்ட வல்லுநர் டத்தோ பரம் குமரசாய இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்;

இவர் யாழ் செயலகத்தில் இன்றைய தினம் இடம்பெறவுள்ள குடாநாட்டு புனர்வாழ்வு புனரமைப்பு தொடர்பிலான கலந்துரையாடலில் பங்கேற்று ஆக்கபூர்வமான தனது கருத்துக்களை முன்வைக்கவுள்ளார்;

உடனடி மனிதாபிமானபுனரமைப்பு பணிகள் குறித்தே இன்றைய தினம் ஆராயப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது; (உ-6)

## வெள்ளத்தால் பாதிப்புற்ற 300 குடும்பங்களுக்கு தலா 3 ஆயிரம் நிவாரணம்

(கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 300 குடும்பங்களுக்கான நிவாரண உதவிகளை இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தின் கிளிநொச்சி கிளையினர் வழங்கியுள்ளனர்.

பூநகரி முக்கொம்பன், கிளிநொச்சி இரத்தினபுரம் உருத்திரபுரம், வட்டக்கச்சி முதலான இடங்களில் வெள்ளத்தால் கடும் பாதிப்புற்ற மக்களுக்கு ஒவ்வொரு குடும்பத்திற்கு 3 ஆயிரம் ரூபா பெறுமதியான உதவிப் பொருட்கள் கிராம அலுவலர்கள் பிரதேச செயலாளர் முதலானோரின் சிபாரிசின்பேரில் இவ்விதம் வழங்கப்பட்டதாக இலங்கை செஞ்சிலுவைச்சங்க கிளிநொச்சி கிளையின் பொருளாளர் டாக்டர் கே. வி. கே. திருலோகமூர்த்தி தெரிவித்தார்; (உ)

## கையடக்கத் தொலைபேசி உள்வரும் அழைப்புகளுக்கு கட்டணம் அறவிடப்படும்

(கொழும்பு)

கையடக்கத் தொலைபேசிகளின் உள்வரும் அழைப்புகளுக்கு அறவிடப்படும் கட்டணங்களை இரத்துச் செய்யும் நடைமுறை எதிர் வரும் ஜூலை மாதம் வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

தனியார் கையடக்கத் தொலைபேசி நிறுவனங்களுடன் தொழில் நுட்ப ரீதியாக தற்போது பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன;

இதனாலேயே உள் வரும் அழைப்புகளுக்கான கட்டணங்களை உடன் இரத்துச் செய்வதில் தாமதமாகின்றது என மக்கள் தொடர்பாடல் அமைச்சின் செயலாளர் குமார் அபயசிங்க தெரிவித்துள்ளார்.

தை மாதம் முதல் இவ் உள்வரும் தொலைபேசி அழைப்புகளுக்கான கட்டணங்கள் யாவும் இரத்துச் செய்யப்பட்டிருப்பதாக அமைச்சு முன்னர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது; (உ-8)

## நிர்வாகிகள் தெரிவு

(கோப்பாய்)

கோப்பாய் அரசினர் ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம் பெற்றது.

தலைவராக து. தனபாலசிங்கம், உபதலைவராக சி. இராஜரட்ணம், செயலாளராக வைத்திய அதிகாரி திருமதி கே. இராஜசேகரம், உபசெயலாளராக மு. யோகவிரட்ணராஜா, பொருளாளராக வை. குணசேகரம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்; (உ-79)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டிப் பிரதேசசபைக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கான முக்கிய கலந்துரையாடல் இன்று பி. ப 4 மணிக்கு கரவெட்டிப் பிரதேச சபை விளையாட்டுப்பணிமனையில் நடைபெறவுள்ளது;

கரவெட்டிப் பிரதேச சபையில் பதிவு செய்யப்பட்ட அனைத்து விளையாட்டுக் கழகங்களையும் இதற்கு வருகை தருமாறு கரவெட்டி விளையாட்டுச் சபைத் தலைவர் கேட்டுள்ளார், (உ-6)

# பல்லவர் காலத்திற் சிற்பக்கலை சிறப்புற்றது கற்கோயில்களும், கடவுள் சிலைகளும் உருவாகின

கலாநிதி சு.வித்தியானந்தன்

தமிழ்நாட்டின் சிற்பக்கலை மிகப்பழைமையானது. மரத்திலும் கல்லிலும் வெகு நுண்ணிய சிற்ப வேலைப்பாடு துலங்கச் செய்வதில் தமிழ் நாட்டுச்சிற்பிகள் கைதேர்ந் தவர்கள். அக்காலத்துச்சிற்பிகள் தாம் வழிபட்ட கடவுளின் சிலை உருவத்தைச் செய்வதிலேயே தம் வாழ்நாளைக் கழித்தனர். சிற்பி ஒருவன் முருகக்கடவுளின் திருவு ருவைச் சிலையிற் செதுக்குமுன் முருகனின் உடலுறுப்பு, இலக்க ணங்களைக் கூறும் பாடல்களைப் படித்து அவற்றை மனத்தில் அமைப் பான். கண், புருவம், புருவத்தின் மயிர், இமை, நெற்றி, இதழ் என்று இவ்வாறே முருகனின் உறுப்புக் களைத் தனித்தனியாகவும், அவை யாவும் ஒன்றாயிசைந்த திருக்கோல மாகவும் மனதிலே அமைப்பான். அச்சிற்பியின் உள்ளம் முருகக் கடவுளது திருவழகிலே இரண்டறக் கலக்கும். அந்நிலையில் அவன் உளியைக் கையில் எடுப்பான். அவன அறியாமலே உளி செதுக்கிச் செல்லும். வெகுவிரைவில் சிலையில் முருகக் கடவுளது திருமேனி உருவாகி விடும்.

### கோயிலும் கோபுரமும்

தமிழ் நாட்டு அரசரும் சிற்பி களைக் கலைஞானிகளாகப் போற்றி ஆதரித்தனர். சிற்பக்கலையிலே துறைபோனவர் தமிழ்மொழியிலும், சங்கதமொழியிலும் தேர்ந்தவராக விளங்கினர். அரசர் அவர்களுக்குப் பணமும் நிலமும் வழங்கினர். சிற்பி களும் கடவுளர்க்கமைந்த கோயில் களை எழுப்புவதையே தம் வாழ்க் கைக் குறிக்கோளாகக் கொண் டனர். கோயில்கள் கட்டுவதும், கோபுரங் களை வானத்தை நோக்கி எழுப்பு வதும் மண்டபங்கள் அமைப்பதும் கடவுளர்க்குச் செய்யும் திருப்பணிக ளாயின.

கிறிஸ்துவுக்குப் பின் ஆறாம் நூற்றாண்டு வரை தமிழ் நாட்டிலே கருங்கல்லால் கோயில் எழுப்பும் வழக்கம் இருக்கவில்லை. பல்லவர் ஆட்சி தொடங்கும் வரை தென்னாட்டுக் கோயில்களைச் சுடுமண்ணாலும், மரத்தாலும் அமைத்தனர். ஆயினும் அவை யாவும் சித்திர வேலைப் பாட்டுடன் விளங்கின. பல நூற்றாண் டுகளாகத் தமது இல்லங்களையும் மாடமாளிகைகளையும், அரண்மனை களையும் தமிழ்நாட்டினர் சுடுமண் ணாலும், மரத்தினாலும் கட்டினர். தமிழகக் காடுகளில் கருங்காலி, தேக்கு முதலிய மரங்கள் செழித் தன. அம்மரங்கள் செதுக்கு வேலைக்கு ஏற்றவை. அவற்றிலே சித்திர வேலை செய்யவல்ல சிற்பிகள் பலர் இருந்த னர். கட்டிடங்களின் சுவர்களில் காரையால் சித்திரவேலைகளை அழகு றச் செய்தனர். சித்திரபபூவேலை அமைப்பதற்கும் பலவகை உருவங் கள் அமைப்பதற்கும் கிளிஞ்சிற் சுண்ணாம்பு பயன்பட்டது. மரத்தச்சர் பதுமை களையும் மலர்களையும் சித்திரங்களையும் மரத்தில் செதுக்குவதில் சிறந்து விளங்கினர். அச்சிற்பிகள் தூண்களிலும், சுவர்க ளிலும் ,வாயிற் கதவுகளிலும், கதவுநிலைகளிலும், விமானங்க ளிலும், விட்டங்களிலும், தூண்களின் போதிகைகளிலும், குறுக்கு விட்டங் களிலும் தம் சிற்பத்தினைக் காட்டினர்.

### மகேந்திரவர்மனின் கற்கோயில்கள்

இவ்வாறு மரத்தச்சர் கட்டிய சிற்பத்திறமைகளைப் பல்லவர் காலம் முதல் கற்றச்சாரும் கல்லிலே கட்டத் தொடங்கினர். மூலத்தானத்திற்கு மேல் அமையும் விமானமும், கூரிய தாய் எழுகின்ற கோபுரமும் அமைப் பது மிகப்பழைய வழக்கம். அவ் வழக்கப்படியே பல்லவஅரசர் ஆட்சிக் காலத்திலும் தென்னிந்தியச் சிற்பி கள் ஒரேகல்லைச் செதுக்கிக் குடைந்து கோயில்களை அமைத்தனர்.

தமிழகத்தில் முதன்முதல் கற் கோயில்கள் அமைக்கத் தொடங்கிய வன் பல்லவ அரசன் மகேந்திர வர்மனே. கி.பி 615 தொடக்கம் 630 வரை ஆட்சிபுரிந்த அவ்வரசன் காலத்தில் வடிவாக்கிய கற்களால் கோயில் கட்டி எழுப்புவது வழக்கில் வந்தது. மகேந்திரவர்மனது ஆட்சி யில் தென்னாட்டிலே வாழ்ந்த தச்சர் முழுக்குன்றுகளை வெட்டி, அவற்றுள் கோயில்களைக் கட்டினர். இம்முறைப்படி அமைந்த கோயில் கள் குகைக் கோயில்களென வழங் கின. மகேந்திரவர்மனது காலத்துக் கோயில்களைப் பிற்காலத்துக் கோயில்களிலிருந்து வேறுபடுத்தி அறிவதற்குச் சான்றுகள் பலவுள. அக்கோயில்கள் யாவும் மலைச் சரிவில் குடையப்பட்டவை. இம்மலைச் சரிவுகளில் கோயில்களைக் குடையும் பொழுது தூண், சுவர் முதலியன அமைப்பதற்குரிய பகுதிகளைவிட்டு ஏனையபகுதிகளைக் குடைந்தெடுத் தனர். கோயிலின் நடுவில் மூலத் தானம் இருக்கும். அதனுள்ளே அலங்கார வேலைப்பாடு இல்லை. ஆயினும் அதன் இருபுறங்களிலும் வாயிற் காவலரின் உருவங்கள் உண்டு. இவ்வுருவங்கள் அமைந்தி ருக்கும் நிலை பிற்காலத்து நிலை யிலும் வேறுபட்டது. அக்காவ லர்(துவாரபாலகர்) தலைப்பாகை உடையவர். அவரின் வலக்கை இடக்கையின் மேலிருக்கும். இடக் கை தடியொன்றைப் பற்றிய வண்ண மிருக்கும். தடிமேல் முன்பக்கம் சிறிது சாய்ந்த வண்ணம் பார்ப் போரைத் தாக்க முயல்வரைப் போலக் காணப்படுவர் அக்காவலர். சில காவலரின் கையில் வணக்கத்தின் பொருட்டு தலையை நோக்கி உயர்த் தப்பட்டிருக்கும்.

### தூண்களின் அமைப்பு

மகேந்திரவர்மன் காலத்துக் கோயில்களுக்கே உரிய பண்புகளில் ஒன்று. தூண்களின் அமைப்பு, தூணின் முழு உயரம் ஏழுமுழம் இருக்கும். மேற்சதுரமும், கீழ்ச்சதுர மும் இரண்டிரண்டு முழம் உயரமி ருக்கும். தூண்களின் மேலிருக்கும் போதிகைகளும், கீழிருக்கும் பீடங் களும் சதுரமாகச் செய்யப்பட்டன. தூண்களின் நடுவில் பட்டை தீட்டிய மூலைகள் இருக்கும் போதிகைகளிலும் பீடத்திலும் தாமரைப்பூ செதுக்கி யிருப்பதைக் காணலாம். தூண் களின் புறத்திலே மகேந்திரவர்மனது விருதுப் பெயர்கள் செதுக்கியிருக்கும். தூண்களின் மேல் அமைந்த போதிகையோடு சதுரப் பலகையும் வெட்டியிருக்கும்.

முதல்முதல் இவ்வரசனால் கட்டப் பட்ட குகைக்கோயில் மண்டகப்பட்டு என்ற ஊரில் உள்ளது. இக்கோ யிலில் பிரமா, திருமால், சிவன் ஆகிய மூவருக்கும் உரிய உள்ளறை கள் உண்டு. காவலரின் தடிகளில் பாம்புகள் சுற்றியிருக்கின்றன. திருச் சிராப்பள்ளி மலைக்கோட்டையில் சிவனுக்கு அமைக்கப்பட்ட கோயில் இன்னும் சிறந்த வேலைப்பாடு கொண்டதாக விளங்குகின்றது. இக்கோயிலின் மேற்புறச்சுவரின் நடுவில் செதுக்கப்பட்ட பதுமை, கங்கை அணிந்த சிவன் எதிரில் நிற்பது போன்ற காட்சியை அளித்து நிற்கின்றது. நாமக்கல் மலைக் கோயிலில் பள்ளி கொண்ட பெருமாள் உருவம் சிறந்த செதுக்கு வேலை உடையதாய் அமைந்துள்ளது. கோயிலின் முன்மண்டபத்திற்கு வெளி யிடம்,மலையைக்குடைந்து அமைக்கப் பட்டிருப்பது அழகான வேலைத் திறன் வாய்ந்தது. இவ்வாறு மகேந்திர வர்மன் கட்டுவித்த கற்கோயில் களையும், கல்லில் செதுக்கிய சிற்ப வேலைகளையும் இன்றும் தென் னாட்டில் பல இடங்களிலே காணலாம்.

### மாமல்லன்

மகேந்திரவர்மனுக்குப் பின் வந்த அவன் மகன் நரசிம்மவர்மன் (மாமல்லன்) காலத்திலே சிற்பக்கலை சிறந்து விளங்கியது. இவன் காலத்திலே தான் மகாபலிபுரத்தில் சிறந்து விளங்கும் தேர்கள்(இரதங்கள்) என்ற சொல்லப்படும் பாறைச்சிற் பங்களும், குன்றிலே குடையப்பட்ட கணேசர் முதலிய குகைக் கோயில் களும், கல்லிற் செதுக்கப்பட்ட கங்கா வதாரம் போன்ற சிற்பவிசித்திரங் களும் செய்யப்பெற்றன.

நரசிம்மவர்மன் முதலில் மகேந்திர வர்மனைப் பின்பற்றிக் குகைக் கோயில்களையே அமைத்தான். இவர் குடைந்த கோயில்கள் ஓவிய வேலைகள் மிகுதியாய் உடையன வாக இருந்தன. கோயிலின் முன்மண் டபச்சுவர்களில் விளங்கும் படிமங் களும், வரிசை வரிசையாக அமைந்த அன்னப்பறவைகளும், சிறுமணிக் கோவைகளின் நிரைகளும், பூவேலை களும்யாவும் மகேந்திரவர்மனுடைய காலத்திலே கட்டிய கோயில்களில் இருப்பவைகளை விட மிகச்சிறந்த வேலைப்பாடுடன் விளங்குவன. மேலும் நரசிம்மன் கட்டிய தூண்க ளிலமைந்த போதிகைகள் உருண்டு இருக்கும். பந்து வடிவமான இந்தப் போதிகைகளை ‘குடதாடி’ என்பர். இந்தக் குடதாடியின் மேற்புறத்தில் பள்ளமான கழுத்து வளையமும் உண்டு. கழுத்து வளையத்தின் மேல் சதுரப்பலகை ஒன்றிருக்கும். அந்தச் சதுரப்பலகைமேல் சதுரக்கல்லும், அதன்மேல் தலைப்போதிகைப் பலகை யும் இருக்கும். தூண்களினடியில் இரண்டு முழ அகலமும், இரண்டு முழ உயரமும் கொண்டு திறந்த வாயுடன் இருக்கும் சிங்கங்கள் தூண் களைத் தம் முதுகிலே தாங்கி இருத்தல் போன்ற வேலைப்பாடு அமைந்திருக்கும். இவற்றைச் சிங்கத் தூண்கள் என்பர். இவை தாம் நரசிம்மபல்லவன் காலத்தில் குடைந்த குகைக்கோயில்கள் என்று சுட்டிக் காட்டுவன.

### கற்சிற்பத்தேர்கள்

நரசிம்மவர்மன் மகேந்திரவர்மனைப் பின்பற்றி குகைக் கோயில்களைக் குடைவதோடு அமையாது, ஒற்றை கல்லையே கோயிலாக அமைக் கும் புதியவேலையையும் தொடங் கினான். இவ்வொற்றைக்கற்கோயிலைப் பொதுமக்கள் தேர்கள்(இரதங்கள்) என அழைத்தனர்.இவை தேர்வடிவ மாய் அமைந்தமையால் இப்பெயர் பெற்றிருக்கக்கூடும். இவ்வாறு அவன் அமைத்த ஐந்து கோயில் களுக்குப் ‘‘பாண்டவர் தேர்கள்’’ என்ற பெயரிட்டனர். அப்பெயரே இன்றும் வழக்கில் இருந்து வருகிறது. இதன் கண் அழகிய சிற்பசித்திர வேலைப்பாடுகள் வெகுநுணுக்கமாக அமைந்துள்ளன.பழங்காலத்தல் மரத்தாலும், மண்ணாலும் செய்யப் பட்ட கோயில்களிலுள்ள பல வேலைப் பாடுகளையும் இக்கற்கோயில்களில் அப்படியே காணலாம். அம்மர வேலைகள் யாவும் இக்கற்கோயில் களில் கல்லில் செதுக்கிக் காட்டப் பட்டுள்ளன.

மூன்றாவதாக, நரசிம்மன் காலத் துச்சிற்பக்கலையில் குறிப்பிடத் தக்கது பாறைகள் மீது புராணக் கதைகளை படங்கள் வாயிலாக விளக்கும் முறை.இத்தகைய சிற்பங்க ளுள் கோவர்த்தன மலையைக் கண்ணன் ஏந்தி நிற்பதாக அமைந் துள்ள சிற்பமும், கங்கைக்காட்சி சிற்பமும் குறிப்பிடத்தக்கன. கோவர்த் தன மலையைப் பிடித்துள்ள கண்ண னும், அவன் அருகேயுள்ள பலராம னும் பெரியவராகத் தெய்வத் தன்மையுடன் காணப்படுகின்றனர். மலையடியில் இடையர் வாழ்க்கைக் காட்சிகள் சில குறிப்பிடப்பட்டுள் ளன.அக்காட்சிகளில் சிறந்தது கறவை யின் காட்சி. ஒருவன் பால் கறப்ப தும், பசு தன்கன்றை நக்குவதும் அழகிய வேலைப்பாட்டுடன் காட்டப் டுள்ளன. கங்கைக் கரைக்காட்சியை ‘அர்ச்சுனன்தவம்’ என்பர். பாறை மீது விழுகின்ற மழைநீர் வடிந்து பாயும் பிளப்பொன்று காணப்படும். அப்பிளப் பிற்குத் தென்பாகத்தில் ஒற்றைக் காலில் நின்று தவம் செய்கின்ற உருவம் ஒன்றுண்டு. அது அர்ச்சுனன் தவம் செய்கின்றதைக் குறிப்பிடு கின்றதென்பர். மகாபாரதத்தில் கூறப்பட்டுள்ள செய்திகள் பலவற் றைக் காட்சி உருவகமாக சிற்பிகள் இங்கு செதுக்கியுள்ள திறன் போற்று தற்குரியது.

### காஞ்சி கைலாசநாதர் கோயில்

ஏழாம் நூற்றாண்டின் இறுதியில் இராசசிம்மன் காலத்தில் பல்லவ சிற்பக்கலை இன்னும் மேன்மையடைந் தது. இவன் காலத்தில் பாறைகளை வெட்டும் முறை மாறி பாறாங்கற்களைச் செதுக்கி, நேர்மை செய்து சிறந்த கோயில்களைக் கட்டத்தொடங் கினர்.காஞ்சியிலுள்ள கைலாசநாத ரின்கோயில் இக்காலத்தது. இக்கோயி லில்வெகுநேர்த்தியான கர்ப்பக்கிர கமும், அதன் முன் சிற்பச்சிறப்புடன் கூடிய தூண்களையுடைய முகமண்ட பமும், அவைகளைச சுற்றி சிறந்த புராண உருவங்களுடன் உள்ள சிறும திலும் அதைச்சுற்றிப் பிரகாரமும் வெளி யிலே சிறு கோபுரங்களோடு கூடிய பெரியமதிலும் இருக்கின்றன. கைலாசநாதர் கோயில் பல்லவரது சிற்பக்கலையை உலகுக்கு விளக்க எழுந்த சிற்பக்கலைக்கூடம் என அறிஞர் கூறுவர். இராஜசிம்மன் காலத்திலிருந்தே தமிழ்நாட்டிலே குகைகளில் இருந்து கோயில்கள் குடையாது கோயிலைக்கட்டும் கலை தோன்றியது. பிற்காலத்திலே அண்ணாமலை, தஞ்சை, மதுரை, ஸ்ரீரங்கம் முதலியஇடங்களில் மிக உன்னதமாகவும் மக்களின் உள்ளத் தினையும், கண்ணையும் கவரக் கூடிய தாகவும் எழுந்த கோயில்களுக்கு இவர் காலத்துக் கோயில்களே வழி காட்டின.

### சிற்பக்கலை விருத்தியும் தெய்வச்சிலைகளும்

பல்லவர் ஏழாம் நூற்றாண்டு தொடங்கி ஒன்பதாம் நூற்றாண்டு வரை தமிழ் நாட்டை ஆண்டனர். அவர் காலத்துச் சிற்பக்கலை விருத்தி யைச் சுருக்கமாக நோக்கின், முதலா வதாகக் குறிப்பிட வேண்டியது மகேந்திரவர்மன் காலத்திலே தமிழ் நாட்டில் முதன்முதலாகக் கற்கோயில் கள் கட்டத் தொடங்கியதே. அவன் இயற்கையாயுள்ள சிறு குகை களைச் செதுக்கிச் செம்மைப்படுத்தி இலிங்கம் முதலிய சின்னங்களைப் பூசை செய்ய ஏற்படுத்தினான். அவன் காலத்திலும் அவனுக்குப் பின் அரசாண்ட நரசிம்மன் காலத் திலும் இயற்கையாயுள்ள கற்பாறை களைக் கோபுரம், கர்ப்பக்கிரகம் கற்றூண்களிற்கும் வெளிப்புறம் ஆகியவற்றுடன் அழகிய உருக்க ளாகச் செதுக்கி அவைகளுக்குள் கடவுளின் வழிபாடு நடந்தது. அதன் மேல் கற்பாறைகளை அளவுக்குத் தகுந்தவாறு செதுக்கி அவைகளை ஒன்றிற்குமேல் ஒன்றாக அடுக்கிக் கட்டடம் எழுப்பினார்கள். அதற்குப் பிற்பட்ட காலத்திலே கோயில் களின் நடுவிலே அடுக்குகளுள்ள கோபுரத்தோடு கூடிய கற்பக்கிர கமும் அதற்கு முன்பு சிற்பவேலைக ளோடு கூடிய முகமண்டபமும், வெளியிலே சித்திரவேலைகள் செய்த மதில்களுடன் பிரகாரமும் ஏற்பட்டன. இவ்வாறு சிற்பக்கலை தமிழ் நாட்டிலே பல்லவர் காலத்தில் விருத்தி அடைந்தது.

மேலும் கடவுளின் உருவத்திலும் மாறுதல்கள் ஏற்பட்டன. தொடக் கத்தில் இலிங்கத்தைப் போலுள்ள குழவி வடிவான கற்சிலையே வழி பாட்டிற்குரிய உருவமாக அமைந்தது. காலஞ்செல்லச்செல்ல இவ்வுருவத் திலிருந்து மனித உருவங்களைப் போலுள்ள சிலைகள் தோன்றின. சிவன், திருமால் முதலிய மூர்த்தி களின் வருணனைக்கு ஏற்றவாறு முதலிற் பாறைகளிலும், பிறகு செம்பு முதலிய உலோகங்களிலும் விக்கிர கங்கள் தோன்றின. இக்கலை விருத் திக்கும் காலாயிருந்தவர் பல்லவரே.





திருநெல்வேலி லயன்ஸ் கழக அறக்கொடை வழங்கல் வைபவத்தின்போது பிராந்திய இணைப்பாளர் டாக்டர் என்.எஸ் அருளானந்தம் உரையாற்றுவதையும், நல்லை ஆதீன முதல்வர், லயன்ஸ் தலைவர் கலாநிதி க.குணராசா, மாவட்ட இணைப்பாளர் லயன் எஸ்.எஸ். தங்கராஜா ஆகியோர் அமர்ந்துள்ளதையும், திருநெல்வேலி லயன்ஸ் கழகம் வழங்கிய வலது குறைந்தோருக்கான முச்சக்கரவண்டிகளைப் பெற்றவர்களில் சிலரையும் படத்தில் காணலாம்.

## இன்று ஒரு தகவல்

### விதியின் பயன் வருவது எப்படி?

நாம் இது நடக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறோம். அது நடப்பதில்லை, நாம் இது நடக்கக்கூடாது என்று ஆசைப்படுகிறோம். அது நடந்து விடுகிறது. இதற்கு எதைக் காரணமாகச் சொல்வது? அதற்குத்தான் சிலர் 'விதி' என்று பெயர் வைத்திருக்கிறார் கள். விருப்பத்துக்கு மாறாக நடந்தால் அது விதி என்று நாம் மிகவும் சுலபமாகச் சொல்லி விடுகிறோம்.

ஒரு சமயம் தேவலோகத்திலே நாராயணனும், இலட்சுமி தேவியும் வெகு உல்லாசமாக உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்களாம். பூலோகத்தில் நடப்பதெல்லாம் அவர்களுக் குத்தெரியும். அந்தச் சமயத் தில் இங்கே ஒரு பிச்சைக்காரன் பிச்சை எடுத்துக் கொண்டிருந்தான். சாப்பாடு கிடைத்ததும் அதை எடுத்துக் கொண்டு ஒரு தனி இடத்துக் குப்போனான். உட்கார்ந்தான். சாப்பிடுவதற்கு முன் கடவுளை நினைத்தான். நாராயணா! நாராயணா! என்று நிவேதனம் பண்ணி விட்டுச் சாப்பிட ஆரம்பித்தான்.

தேவலோகத்திலிருந்த இலட்சுமிதேவி இதைப் பார்த்தார்கள். உடனே நாராயணனிடம் சொன்னார். "அதோ பார்த்தீர்களா? உங்களுடைய பக்தன்! அவன் தினமும் பிச்சை எடுத்து வருகிற சாப்பாட்டை முதலில் உங்களுக்கு அர்ப்பணித்துவிட்டுத் தான் சாப்பிடுகிறான். அப்பேர்ப்பட்ட உங்களுடைய பக்தனைப் பிச்சை எடுக்க விட்டிருக்கிறீர்களே! இது நியாயமா? அவனுக்குக் கொஞ்சம் செல்வத்தைக் கொடுத்து வசதியாக வாழவைக்கக்கூடாதா? என்று கேட்டார். நாராயணன் சிரித்தார். பின்னர் சொன்னார்.

"இவன் போன பிறவியில் செல்வந்தனாகத்தான் இருந்தான். அப்படி இருந்தும் இவன் யாருக்கும் எதுவும் கொடுக்கவில்லை. ஏழைக்களுக் குத்தான தருமம் எதுவும் செய்யவில்லை. அதனால் தான் இந்தப் பிறவயில் கஷ்டத்தை அனுபவிக்கிறான். அது அவனுடைய விதியின் பயன்" என்றார் நாராயணன். ஆனால், அதை இலட்சுமிதேவி ஒத்துக் கொள்ளவில்லை.

"என்ன சொல்கிறீர்கள்? விதியாவது ஒன்றாவது. நாம் நினைத்தால் முடியாதது ஒன்று உண்டா? இப்பொழுது நான் அவனுக்கு உதவி செய்யப் போகிறேன்" என்றார். "என்ன செய்யப்போகிறாய்?" என்றார் அவர். "அவனுக்குக் கொஞ்சம் செல்வம் கொடுத்து அவனைக் கஷ்டத்திலிருந்து காப்பாற்றப் போகிறேன்" என்றார். "சரி! செய்துபார்!" என்றார் அவர்.


உடனே இலட்சுமிதேவி ஒருபணமுடிப்பைப் பூலோகத் தில் அந்தப் பிச்சைக்காரன் நடந்து வந்துகொண்டிருந்த வழியில் போட்டார். வழியில் இது கிடப்பதைப் பார்த்தால் அவன் எடுத்துக் கொள்வானல்லவா? அதனால் போட்டார். ஆனால் அந்த நேரம் அந்தப்பிச்சைக்காரன் என்ன பண்ணினான் தெரியுமா? பார்வையில்லாதவர்கள் தெருவில் எப்படி நடந்து போகிறார்களென்று தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஓர் ஆசை வந்தது. அதாவது பார்வையில்லாதவர்கள் மாதிரி எப்படி நடந்து கொள்வது என்று யோசித்து நடந்து பார்த்தான். அதாவது கண்களிரண்டையும் கெட்டியாக மூடிக்கொண்டு தட்டுத்தடுமாறி நடந்து வந்து கொண்டிருந்தான். கண்கள் இரண்டையும் மூடிக் கொண்டதனால், வழியில்கிடந்த பணமுடிப்பு அவன் கண்ணில் படவில்லை. அதைத் தாண்டிப் போய்விட்டான். அதன் பின்னர் கண்ணைத் திறந்தான். ஆகா! கண்ணில்லாதவன் மாதிரி நடந்து விட்டோமே என்கின்ற சந்தோஷத்திலேயே அவன் போய்விட்டான்.

பின்னால் ஒருவன் சாவகாசமாக வந்து கொண்டிருந்தான். அவன் கண்ணிலே அந்தப் பணமுடிப்புபட்டது. எடுத்துக் கொண்டு சந்தோஷமாக நடக்க ஆரம்பித்து விட்டான் அவன். தேவலோகத் திலிருந்து நாராயணனும் இலட்சுமிதேவியும் இதைப் பார்த்துக்கொண் டேயிருந் தார்கள். "பார்த்தாயா... என்ன நடந்ததென்று! அந்தப்பக்தனைப் பணக்காரனாக ஆக்கவேண்டுமென்று துடித்தாயே, முடிந்ததா உன்னால்? என்றார். இலட்சுமி தேவி அதன் பின்புதான் ஒத்துக்கொண்டாராம்.

"உண்மைதான் பிரபு! விதிப்படிதான் எதுவும் நடக் கிறது என்பதை இப்போது நான் ஒத்துக் கொள்கிறேன்" என்றாராம். இப்போது இந்தக் கதையை அறிவு பூர்வமாகக் கொஞ்சம் சிந்தித்துப், பார்ப்போம். ஒரு பக்தனை பணக்காரனாக்க வேண்டும் என்று கடவுள் நினைத்தால் கூட அது முடியாது என்கின்ற ஓர் உண்மை இதற்குள்ளே இருக்கிறது அல்லவா? அப்படியானால் அந்த விதி யாருடைய கையில் இருக்கிறது? மனிதனுடைய கையிலேதான். அவன் நல்லவிதமாக நடந்துகொண்டால் விதியும் அவனுக்குச் சாதகமாக இருக்கும். அப்படி இல்லையென்றால், விழித்துக் கொண்டிருக்க வேண்டிய நேரத்திலே கண்கள் மூடியிருப்பது போல ஆகிவிடும். இந்தப் பிச்சைக்காரனுக்கு ஆனது போன்று.

ஒரு ஜெயிலில் இரண்டு கைதிகள், இருவரும் பேசிக் கொண்டிருந்தார்கள். 'நீ எப்படி இங்குவந்து சேர்ந்தாய்" என்று கேட்டான் ஒருவன். "பணமில்லை! யாரும் உதவி செய்யவில்லை. திருடினேன். அகப்பட்டுக் கொண்டேன். அது தான் வந்து விட்டேன்" என்றான். அதுசரி... நீ எப்படி இங்கே வந்து சேர்ந்தாய்? என்று இவனை அவன் கேட்டான். அதற்கு இவன் "எனக்கும் பணமில்லை. ஆனால் ஒரு பெரிய மனிதன் எனக்கு உதவி பண்ணினார். ஒரு பெட்டி நிறையப்பணம் கொடுத்து என்னை வைத்துக்கொள்ளச் சொன்னார். அப்படி யிருந்தும் நான் இங்கே வந்து விட்டேன்" என்றான் "அது எப்படி?" என்றான் அவன். "அதுதான் விதி! அந்தப் பெரிய மனிதன் என்னிடம் கொடுத்தது முழுவதும் கள்ள நோட்டாக இருந்துவிட்டதே! என்ன பண்ணுவது? என்றான் இவன்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்.*



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனையும் இணைத்து கொழும்பு நகரவீதியில் விற்பனைக்கு வந்துள்ள கடிகாரங்களைப் படத்தில் காணலாம்.

## விடுதலைப் புலிகளுடன் இணைந்து
## யாழ் - கொழும்பு பஸ்சேவை தனியார் பஸ்சங்கம் முயற்சி

(கொழும்பு)

கொழும்பு - யாழ்ப்பாண பஸ் சேவையை நடத்தும் விதத்தில் மீண்டும் தென்னி லங்கை தனியார் பஸ்சங்கம் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்தவிருக்கிறது. புலிகளுடன் கூட்டாக இந்த பஸ்சேவையை நடத்துவது பற்றி இம்மாத இறுதிக்கு முன் பேசவிருப்பதாக சங்கத்தின தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து தினமும் 10 பஸ்களும் யாழ்ப்பாணத்தி லிருந்து 10 பஸ்களும் சேவைலீடுபடுத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இதுதொடர்பான உடன்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டபோதிலும் சில பிரச்சினைகள் காரணமாக பஸ்சேவை நடைபெறவில்லை.

உதாரணமாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஒரு விபத்து நடைபெறுமாயின் அது பற்றி முறையிடுவதற்கு ஏதேனும் ஒரு அதிகாரபீடம் இருத்தல் வேண்டும்.

இதவேளை, ஒரு பயணிக்கு ரூபா 200/- வீதம் வரி அறவிடும் கொள்கையை புலிகள் கைவிட வேண்டும் என்று பேச்சின் போது அவர்களிடம் கேட்கவுள்ளோம்.

அவ்வாறின்றேல் ஒரு நுழைவு வரியை மட்டும் அறவிடும்படி கேட்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ.)

## நீரிழிவு மருந்துகளுக்கு நாடு முழுவதும் தட்டுப்பாடு

(கோப்பாய்)

கொழும்பிலுள்ள நீரிழிவு மருந்துக்களஞ்சியம் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளமையால் அனைத்து அரசினர் வைத்தியசாலைகளிலும் நீரிழிவு மருந்துகளைப் பெற முடியாதுள்ள நிலை நாடளாவிய ரீதியில் காணபபடுகிறது.

இதன் காரணமாக தனியார் கடைகளில் இதன் விலை அதிகரித்துள்ளதுடன் தட்டுப்பாடு நிலவுவதாகவும் தெரியவருகின்றது.

இதனால் வறிய நீரிழிவு நோயாளர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

அஸ்பிரின் மாத்திரைக்கும் யாழ் மாவட்டத்தில் தட்டுப்பாடு நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-79)

## சமஷ்டி சாதக பாதகங்கள் குறித்து ஹக்கீம் கனேடிய குழுவுடன் ஆராய்வார்

(கொழும்பு)

தாய்லாந்துப் பேச்சுவார்த்தையில் அரச பிரதிநிதிகளாக கலந்து கொள்ளும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் முஸ்லிம் புத்திஜீவிகள் குழு பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் போப்ரே தலைமையிலான கனேடியக் குழுவினரை தனியாகச் சந்தித்து பேசவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாய்லாந்தில் நடைபெற்று வரும் 4ஆம் கட்டப் பேச்சுவார்த்தையில் போரம் ஒப்பெடரேஷன் என்ற இந்த அமைப்பின் தலைவரான போரோவின் தலைமையிலான கனேடிய சமஷ்டி முறை பற்றி தமது கருத்துக்களைத் தெரிவிக்கவுள்ளது.

அத்துடன், சமஷ்டி முறையிலான ஆட்சியில் உள்ள சிறப்பு அம்சங்கள் குறித்தும் இதனால் முஸ்லிம் மக்களுக்கு எவ்வகையான சாதகபாதகங்கள் ஏற்படும் என்பது குறித்தும் முஸலிம காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் 'அவருடன் சென்ற புத்திஜீவிகளுடன் பேச்சுக்களுக்குப் புறம்பாக கலந்துரையாடல் நடத்தும் எனக் கூறப்படுகின்றது. (உ-10)

## இராசி பலன்

**09. 01. 2003**

**(மார்கழி 25, வியாழன்)**

சப்தமி முழுவதும்
உத்தரட்டாதி பி.இ. 1.34 வரை
இராகுகாலம் - 2.02 - 3.32
சுபநேரம் - 8.02 - 9.32

**மேடம்**
சயன சுகக்குறைவு, காரிய அலைச்சல், சுபசெலவு, வேலைக்கஷ்டம்

**இடபம்**
எதிர்பாராத நன்மை, நல்ல சம்பவம், மனமகிழ்ச்சி, தொழில் முன்னேற்றம்

**மிதுனம்**
மற்றவர்கள் உதவி, முயற்சிகைகூடும், சுபநிகழ்ச்சி, உத்தியோக நன்மை

**கடகம்**
உடல் உழைப்பு, வயிற்றுக் கோளாறு, மனச்சஞ்சலம், முயற்சி தாமதம்

**சிங்கம்**
நண்பர்கள் விரோதம், வீண் தொல்லை, போசனசுகம், காரிய தாமதம்

**கன்னி**
கௌரவமான நிலை, வாகன வசதி, குடும்ப சுகம், காரிய அனுகூலம்

**துலாம்**
எடுத்த காரியம் கைகூடும், பிரயாணம், தனவரவு, சந்தோசமான சம்பவம், உடல்நலம்

**விருச்சிகம்**
மனச்சஞ்சலம், தொழில்நன்மை, புத்திரரால் கவலை, முயற்சி தாமதம்

**தனுசு**
உஷ்ணநிலை, பயந்த சுபாவம், திடீர் நன்மை, தொழில் நன்மை

**மகரம்**
கூட்டு முயற்சி, புதிய பொருள் சேர்க்கை, அந்நியர் சந்திப்பு, தனவரவு

**கும்பம்**
வாக்குக் கலகம், முயற்சி தாமதம், தொழில் முன்னேற்றம், தனவிரயம்

**மீனம்**
நிலைமாற்றம், நண்பர்கள் உதவி, சயன சுகம், நல்ல முயற்சி

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- **வளவன்**

## கிளிநொச்சி மாவட்டத்தில் அதிபர்களுக்கு உள்ளக இடமாற்றம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 15 பாடசாலைகளின் அதிபர்களுக்கு இம்மாதம் முதல் உள்ளக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதன் கீழ் கிளிநொச்சி நகர் முன்னணிப் பாடசாலைகளில் கடமையாற்றிய சில .அதிபர்களும் மாவட்டத்தின் தூர இடங்களில் உள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் அதிபராக கடமையாற்றி வந்த எஸ். செல்வரத்தினம் அக்கராயன் மகாவித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டுள்ளார். திருவையாறு மகாவித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றிய திருமதி. மாணிக்கம், கனகாம்பிகைகுளம் அ.த.க. பாடசாலைக்கும் கனகாம்பிகைகுளத்தில் கடமையாற்றிய ம.பத்மாநாபன் பரந்தன் ம.வி க்கும் பரந்தன் ம.வியில் கடமை யாற்றிய எஸ்.திரவியம் திருவையாறு ம.விக்கும் அக்கராயன் ம.வி அதிபரான எஸ். பாலகிருஸ்ணன் இராமநாதபுரம் ம.விக்கும் இடம் மாற்றப்பட்டுள்ளனர். (உ)

## உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் உதைபந்தாட்டலீக் நடத்தும் 22 வயதுக்குட்பட் டோர் நொக்கவுட் போட்டியில் இன்று பி.ப 3.45மணிக்கு பாரதி விளையாட்டுக் கழகம் எதிர் பொற்பதி விளையாட்டுக் கழகமும், பி.ப 5மணிக்கு சென் மைக்கல் விளையாட்டுக் கழகம் எதிர் சென்மேரிஸ் விளையாட்டுக் கழகமும் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் மோதவுள்ளன. (உ)

## சிறுவர் திறன் விருத்தி
## போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டுக்கான சிறுவர் திறன் விருத்திப் போட்டிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கவிதை, கட்டுரை, கவியரங்கு, பாமாலை ஆகிய போட்டிகள் கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவுகளாக இடம்பெற வுள்ளன.

இவற்றிற்கான விண்ணப்பங்களை பாடசாலை ஊடாக இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்பாக சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கபட்டுள்ளது. (உ-258)

## காய்ச்சலைக் கட்டுப்படுத்தும் பணியில்
## சாவல்கட்டு கிராமிய அபிவிருத்திக் குழு ஈடுபாடு

(சண்டிலிப்பாய்)

பரவிவரும் வைரஸ் காய்ச்சலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் சாவல்கட்டு கிராமிய அபிவிருத்திக் குழு ஈடுபட்டு வருகின்றது

இந்த வகையில், இன்று முதல் இப் பகுதியில் உள்ள பற்றைகள், குப்பைகள், நீர்த்தேக்கங்கள் என்பன சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்படவுள்ளன.

இந்தப் பணியில் பொதுமக்கள் மற்றும் நலன் விரும்பிகளும் ஈடுபடவுள்ளனர். (உ-258)

தூங்காமை கல்வி துணி
வுடைமை இம் மூன்றும்
நீங்கா நிலனாள்பவர்க்கு:
குறள்.

# வலம்புரி

## திருப்திதரும் இணக்கம்

யாழ். குடா நாட்டிலுள்ள உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக் குடியமர்த்தும் விடயத்தில், அரசும் - விடுதலைப் புலிகளும் இணக்கம் கண்டிருப்பது சமாதானத்திற்குத் தடை வந்துவிடுமோ என ஏங்கிய மக்களுக்குத் திருப்தியைக் கொடுத்துள்ளது.

உயர்பாதுகாப்பு வலயம் என்ற பேரில் தமிழர்களின் வாழ்விடங்களை இராணுவம் ஆக்கிரமித்துள்ளது. இதனால் அப்பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் தமது தொழில் செய் நிலங்களை இழந்து பல வருடங்களாகவேலையற்றவர்களாக- இடம் பெயர்ந்த அந்தஸ்த்தோடு வாழ்கிறார்கள்.

இந்நிலையில் அரசும் விடுதலைப்புலிகளும் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளபோது இடம் பெயர்ந்த எம்மை மீண்டும் எமது சொந்த இடங்களில் குடியிருக்க அனுமதியுங்கள் என உயர் பாதுகாப்பு வலயப் பிரதேச மக்கள் கோருகின்றனர்.

மக்களின் இந்த நியாய பூர்வமான கோரிக்கைகளை இராணுவம் ஏற்பதாக இல்லை. இத்தகைய இறுக்கமான பிடியை இராணுவம் கொண்டிருப்பதற்கு வழிகோலியது. பாதுகாப்பு உபகுழுவென்பது மறுக்க முடியாத உண்மை.

சமாதானப் பேச்சு வார்த்தையில் இராணுவத்தையும் ஈடுபடுத்திய போது, அங்கு சமாதானத்திற்கு எதிரான போக்கைக் கொண்டுள்ள இராணுவ உயர் அதிகாரிகள் உயர் பாதுகாப்பு வலயத்தைச் சாட்டாக வைத்து விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கைவிட வேண்டுமென்ற கோரிக்கைகளை முன்வைத்தனர். இந்நிலையில் அரசும்- புலிகளும் தாய்லாந்தில் நான்காம் சுற்றுப்பேச்சில் உயர்பாதுகாப்பு வலயம் குறித்து மனம் திறந்து பேசினர். அதன் பயனாக இருதரப்பும் ஓர் இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளனர்

இதில் உயர்பாதுகாப்பு வலயத்தில்மக்களை மீளக் குடியமர்த்தும் விடயத்தில் அரசும்- விடுதலைப் புலிகளும் இணக்கப்பாட்டிற்கு வந்திருப்பதை விட பாதுகாப்பு உபகுழுவைக் கலைத்து விட்டது மிகப் பெரிய காத்திரமான காரியமாகும்.

# வீட்டுவிடுதிகளின் சுகாதாரச் சீர்கேடுகளும் வைரஸ்காய்ச்சலுக்கு வழிவகுத்திருக்கலாம்

யாழ். ஆஸ்பத்திரிக்குச் சென்றால் அங்கே காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் கட்டில், விறாந்தை, கட்டிலின் கீழ் என்ற நிலையில் கால்வைக்கவே இடம் இல்லாமல் படுத்திருப்பதைக் காணலாம். இக்காய்ச்சல் பரவுவதற்குக் காரணம் தொற்றுநோய் கிருமிகள் தான் என்பது வெளிப்படையான உண்மை, இக்கிருமிகள் எப்படி உற்பத்தியாகின்றன என்பதுதான் கண்டறியப்படவேண்டியவை அனுபவரீதியாக ஐயப்படுத்துகின்ற எனது கருத்தில் பட்டதை தருகின்றேன்.

### வீடு விடுதியாகிறது

இன்று யாழ்.குடா நாட்டைப் பொறுத்த மட்டில் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் குடியிருப்போடு குடியிருப்பாக வீட்டை விடுதியாக்கிச் சுற்றுலாப் பிரயாணிகள் தங்கும் விடுதி என்ற வகையில் இயங்குகின்றன. ஒரு சிறிய குடும்பமோ அல்லது கொஞ்சம் பெரிய குடும்பமோ அல்லது இரண்டு மூன்று குடும்பங்களோ வாழ்வதற்கேற்ற வாறு அமைக்கப்பட்ட வீடுகள்தான் இவை என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். இதற்குரிய கழிப்பறை, குளிக்கும் அறை அங்கே இருந்து வெளியேறும் கழிவு நீர் இவை அனைத்தும் சுகாதார விதிக்கமைய நிச்சயமாக அமைக்கப்பட்ட வீடுகளாகத்தான் இருக்கும். ஆனால் அவை சட்டபூர்வமான தங்ககமாக இயங்க முடியாது.

மேற் சொன்னவாறு நிர்மாணிக்கப்பட்ட வீடு விடுதியாகி (தங்ககம்) நாள் ஒன்றிற்கும் பலபேர் வந்து தங்கிச் செல்கின்ற பொழுது கழிப்பறை எவ்வளவைக் கொள்ளும்? கழிவு நீர் எங்கே செல்லும்? கொம்பாக இருந்தால் அடுத்த நிமிடமே அதற்கென அமைக்கப்பட்ட கான்வழிச் சென்று செல்ல வேண்டிய இடத்தைச் சென்றடைந்து. விடுகின்றது யாழ் குடா நாட்டைப் பொறுத்த மட்டில் மலசலக்கூடம் குளிக்கின்ற கழிவு நீர். இதுதான் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியவை, விடுதி என்று தங்கும்பொழுது பல விய திகளால் பாதிக்கப்பட்டவர்களும் வந்து தங்குவார்கள். அவர்கள் குளிக்கின்ற கழிவு நீர் செல்வதற்குரிய இடவசதியற்ற வீட்டு விடுதியாளர்கள். அடுத்தவீட்டுக்காரரின் வளவில் செல்லவிட்டு அது தேங்கி நிற்கின்றது. இன்னும் சில விடுதியாளர்கள் தங்கள் வீட்டு மதிலோடு வெளியில்வீதியில் கான் வெட்டி அதிலேதேங்கி நிற்கவிடுகின்றனர் இதுதான் மிக அபாயமான செயல்பாடு வீதியோ அல்லது ஒழுங்கையோ பொதுமக்களின் பாவனைக்குரியவை, மற்றும் அக்கம் பக்கம் வீடுகள். இவற்றை கருத்தில்கொள்ளாத சில விடுதியாளர்களின் செயலால் தேங்கிநிற்கின்ற கழிவுநீரில் தொற்றுநோய்க் கிருமிகள் பரவி அயலில் உள்ளவர்களுக்கும் காற்றோடும் வெள்ளத்தோடும் கலந்து தொலைதூரத்தில் வசிப்பவர்களிடமும் ஒட்டிக்கொள்கின்றன. கிருமிகளால் தாக்கப்படுபவர்களின் தேகநிலைமைக்கேற்ப பலவிதமான வியாதிகள் உருவாகின்றன. பலவியாதிக்காரர்கள் குளிக்கின்ற கழிவுநீர் ஆகையால் அக்கழிவுநீரில் பல வியாதிகளையும் தாங்கிய கிருமிகள் உற்பத்தியாகிக் காற்றோடும் வெள்ளத்தோடும் கலக்கின்றன இதனால் தொற்றுநோய்கள் பரவுகின்றன.

நயினை

**நா. கோபாலகிருஷ்ணன்**

### கழிவறை

ஒருகுடும்பம் அல்லது இருகுடும்பம் தங்குவதற்கமைக்கப்பட்ட வீட்டுக்குரிய கழிவறை பலபேர் தங்குகின்ற விடுதியாக மாறும்பொழுது நிறைந்து முட்டியதும்மலகூடபிளேட் ஒருவிதமான காஸ் தன்மையவை துர்நாற்றம் வீச ஆரம்பிக்கும் எங்கிருந்து துர்நாற்றம்வருகின்றது என்பதை அறியாத அயல்வீட்டுக்காரர்கள் தமது வளவில் ஏதாவது இறந்துள்ளதா என்று தேடுகின்றநிலை ஏற்படுகின்றது. தொற்றுநோய்க்கிருமிகள் சுவாசம் மூலமும் உள் செல்லும் நிலை ஏற்படுகின்றது. கழிவறை நிறைந்து பாவிக்க முடியாத நிலை வந்ததும் அதற்குரிய தொழிலாளரைக் கொண்டு அள்ளி வளவில் புதைத்தோ அல்லது வெளியில் ஏதாவது இடத்தில்புதைத்தோ விடுவர் கழிவறை திறந்து அதற்கான வேலைநடைபெறும் பொழுது அயல் வீடுகளில் வசிப்பவர் காற்று வீசும் திசையில் வாழ்பவர்கள் மூக்கைப் பொத்த வேண்டிய நிலை. மணித்தியாலக் கணக்கில் சுவாசிக்காமல் இருக்கமுடியுமா? ஆனால் அனைவருக்கும் அத்துர்நாற்றம் என்ன நிலையில் எங்கிருந்து வருகின்றது என்பதும் அத்துர்நாற்றம் பல வியாதிகளைப் பரப்புகின்றது என்பதையும் அவர்களுக்கு தெரியாது ஏன் என்றால் இது இரகசியமாக நடைபெறுவதுண்டு. இதனாலும் தொற்று நோய்கள் பரவலாம் உயர்ந்த சுற்றுமதில் இல்லாத தங்ககங்கள் அடுத்த வளவில் வசிக்கும் அயல் வீட்டுக்காரர்கள் தான் தகரம் ஓலையால் தங்களிற்கு மறைப்புக்கட்டி வசிக்கின்றனர் மேற்சொன்ன சுகாதார வசதியற்ற தங்ககங்கள் இயங்க எப்படி என்ன சட்டத்தில்! அனுமதி வழங்கினார்கள் என்பது சிந்திக்க வேண்டும். ஏன் என்றால் மக்களின் சுகாதார நலன்பாதிப்பதோடு கலாசாரச் சீரழிவுக்கு உந்து சக்தியாகவும் மாணவர்களின் கல்விக்கு ஊறு விளைவிக்கும் வகையிலும் சில தங்ககங்கள் செயற்படுகின்றன.

### சட்டபூர்வ தங்ககங்கள்

சட்ட பூர்வமான தங்ககங்கள் எது வென்றால், விடுதி அமைப்பதற்கென்றே படம் கீறி, அதை யாழ் மாநகர சபை பார்வையிட்டு அங்கீகரித்தபின் கட்டிடம் கட்டி நடாத்தப்படுகின்ற விடுதிகள். பொதுமக்கள் நலனைப் பாதிக்காது, விடுதிகளிற்கு முதல் அத்தியாவசியமானது உயர்ந்த சுற்று மதில், சுற்று மதிலுக்குள் எது நடந்தாலும் வெளியாருக்குத் தெரியாது. அங்கே இருந்து வெளி வரும் ஒலி கூட வெளியில் நிற்பவர்களை அயலவர்களைப் பாதிக்காது, கட்டிட அமைப்பை அங்கீகரிக்கும் பொழுதே சுகாதார வசதியும் அங்கீகரிக்கப்படுகின்றது.

தற்பொழுதுபெருந்தொகையானவர்களைப் பாதித்துள்ள காய்ச்சல் சில விடுதிகளின் சுகாதாரச் சீர்கேட்டால் உற்பத்தியான கிருமிகளின் தாக்கமாக இருக்குமோ என்ற ஐயப்பாட்டை ஏற்படுத்துகிறது. கழிவு நீர்கள் யாருக்கும் தெரியாமல் வளவுகளில் பல நாள்கள் தேங்கி நிற்பதாலும் கழிப்பிடங்கள் நிரம்பி ஏற்படும் துர்நாற்றமும் விடுதிகளின் கழிவு நீர் வீதி ஓரங்களில் குளமாக நிறைந்திருப்பதும் காய்ச்சலில் நோய் பீடிப்பதற்கு ஏதுவாக அமையலாம். கழிவு நீர் விடுதிகளிலும் அயல் வளவுகளிலும் வீதியின் ஓரங்களிலும் தேங்கி நிற்கும் வகையில் இயங்குகின்ற விடுதிகளின் செயல்பாட்டை பொதுச் சுகாதாரப் பகுதி அதிகாரிகள் பார்வையிட்டு, பொது மக்களின் சுகாதாரத்திற்கு ஊறு விளைவிக்கின்ற தங்ககங்களையும் உயர்ந்த சுற்றுமதில் அற்ற தங்ககங்களையும் மூடுவதே நல்லதாகும். சுகாதாரச் சீர்கேட்டையும் கலாசாரச் சீரழிவையும் நிறுத்த வேண்டுமானால் அவ்வப்பகுதி பொது அமைப்புக்களின் கண்காணிப்பு தங்ககங்கள் மீது இருக்கவேண்டும்.

## சாயி அருளமுதம்



சகல ஜீவராசிகளும் 'எல்லாம்வல்ல இறைவன்' என்றஓரே சொரூபத்தின் அங்கமாதலினால் தாம் வேறு பிறர் வேறுஎன்னும் பேதமற்ற பிரேமையை விருத்தி செய்தலே போதுமானதாகும். அவன் பிரட்டாகிய தெய்வத்தை அன்பினால் மட்டுமே அடைய முடியும். இங்கு பாண்டித்தியம் தேவையில்லை. உண்மையைக் கூறப்போனால் இவ் விஷயத்தில் பாண்டித்தியம் ஒருஇடையூறாகவேஇருக்குமெனலாம். ஏனெனில் பாண்டித்தியமானது அகங்காரத்தை ஏற்படுத்தவும் சந்தேகங்களை வளர்க்கவும் ஏதுவாகக் கூடும். அதேசமயம் மற்றவர்களை எதிர்த்து வெற்றிகொண்டு தாம் கற்றவர்கள் எனச் சிறகை விரித்து வலம் வரவேண்டுமென்ற ஆசையையும் அது ஏற்படுத்தும்.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை

## காரை. வைத்தியசாலை மூடப்படும் அபாயம்

(காரைநகர்)

காரைநகர் அரச வைத்திய சாலை, ஆளணி மற்றும் மருந்துப் பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக மூடப்படும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளது.

வைத்திய சாலையின் இந் நிலையால் இதனை நம்பியுள்ள 9 ஆயிரம் பொதுமக்களின் சுகாதார நிலைமை கேள்விக்குறியாகியுள்ளது.

இவ் வைத்தியசாலையில் கடமையாற்றும் ஒரே ஒரு பெண் வைத்தியரே தினமும் சுமார்200 வெளி நோயாளர்களைப் பார்வையிடுவதுடன், விடுதிகளில் தங்கியிருப்பவர்களையும் பார்வையிட்டு சிகிச்சையளித்து வருகின்றார்

அத்துடன் தற்போது ஒரு தாதி மாத்திரமே கடமையாற்றுவதால் இவர்கள் இருவரும் லீவில்செல்லும் வேளைகளில் வைத்தியசாலை செயலிழந்து விடுவதாக சுட்டிக் காட்டப்படுகிறது.

தவிரவும் இங்கு மிகவும்அத்தியாவசியமான மருந்துகளுக்குக் கூட தட்டுப்பாடு நிலவுகிறது.

இந் நிலைமைகள் குறித்து சுகாதாரத் திணைக்களம் மற்றும் இந்து கலாசார அமைச்சர் ஆகியோருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

(உ-246)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள அமைச்சின் யாழ் மாவட்டச் செயலகம் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடத்தி வரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் இம்முறை உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய ஆசிரியை செல்வி சி. சுஜன்ஜாவின் திருவாசகப் பண்ணிசையும் ''நானும் தானும்' (திருவாசகம்) என்னும் தலைப்பிலான திருமுறைச் செல்வன் ச. விநாயகமூர்த்தியின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன.

(உ)

## ஆட்டோ அன்பளிப்பு

(ஆனைக்கோட்டை)

யா/ சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்தியமகாவித்தியாலயத்திற்கு இந்துகலாசார அமைச்சினால் அண்மையில் ஆட்டோ ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

(உ-201)

## கரும்புலி...

சந்தித்துப் பேசினார்.

அப்போது ஜனாதிபதியின் கருத்துக் குறித்து அபிப்பிராயம் தெரிவித்த போதே பீரிஸ் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்:- அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் தற்போது நிபந்தனையின்றி பேச்சுவார்த்தை இடம் பெற்று வருகிறது.

விடுதலைப் புலிகளுடன் நிபந்தனை இன்றிப் பேசசு நடத்த வேண்டும் என்ற கருத்தையே ஆரம்பத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் கொண்டிருந்தார்.

எந்தவொரு கொரில்லா இயக்கமும் பேச்சுவார்த்தை நடைபெறும் போது ஆயுதங்க ளைக் கீழே வைத்ததில்லை. தீர்வொன்று எட்டப்பட முன்னர் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டுமென்று எதிர்பார்க்கவும் முடியாது.

தற்போது அரசியல் தீர்வொன் றைப பெறுவதற்காகவே பேச்சு வார்த்தைகள் நடைபெறு கின்றன.

அந்த இலக்கு எட்டப்பட்டதும் ஆயுதங்களைக் கீழே வைப்பதும பேச்சுவார்த்தையில உள்ளடக் கப்படும்.

ஆனால் இன்றைய நிலையில் ஆயுதங்களைக் கீழே வைக்குமாறோ அல்லது கரும்புலிகள் அமைப்பை கலைத்துவிடுமாறோ புலிகளைக கோரினால், அது பேச்சுக்களுக்கு நிபந்தனையாக அமைந்து, சமாதான முயற்சிகளைப் பாதிக்கச் செய்துவிடும் என்றும் அமைச் சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் மேலும் தெரிவித்தார். (இ)

## பருத்தித்துறை...

ஈடுபட்டவர்கள்:

- எமது குடும்பங்களை பட்டினி போடாதே
- எமது வேலைகளை எம்மிடமே திருப்பித்தா
- ஒருபைக்கற் சீமெந்து 575 ரூபாவுக்கு விற்கும் போது எமக் குக் கிடைக்கும் கூலி 20.50சதம் மட்டுமே

ஆகிய வாசகங்கள் அடங்கிய பதாகைகள் வைத்திருந்தனர். (ந-52)

## காணாமல்..

பிரதமரின் செயலர் பிரெடமன வீரக்கோன், பிரதமரின் ஆலோசகர் குணசிங்க, புனர்வாழ்வு அமைச் சின் செயலர் கரலியத்த, பாராளு மன்ற உறுப்பினர்களான எம்.கே சிவாஜிலிங்கம், பர்ல்ச்சந்திரன், காணாமல் போனோர் சங்கச் செயலாளர் சற்குணம் உபதலைவர் விஜயகுமார், அன்னையர் முன்ன ணித் தலைவி வி.பிரேமலதா ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்

இச் சந்திப்புக் குறித்து கருத் துத் தெரிவித்த பிரெட்மன் வீரக்கோன் காணாமல் போனோர் சம்மந்தமாக பிரதமரைச் சந் தித்து கலந்துரையாடியபின் தீர்க் கமான முடிவினை அறிவிப்பதா க்த் தெரிவித்தார்.

இதேவேளை காணாமல் போனோர் சம்பந்தமாக இராணுவ அதிகாரியான குலதுங்க 1998ம் ஆண்டு விரிவான அறிக்கையொ ன்றை அரசாங்கத்திற்கு சமர்ப் பித்திருந்ததாகவும்,அதில் அப் போது யாழ்.மாவட்டத்தில் இராணுவத் தளபதியாக இருந்த ஜானகபெரேராவின் பதவிக காலத்திலேயே அதிகமானோர் காணாமல் போனதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை யடுத்து தற்போது அவுஸ்ரேலி யாவுக்கான்இலங்கைத் தூது வராகக் கடமையாற்றும் ஜானக பெரேராவை உடனடியாக இலங் கைக்கு வரவழைத்து விசாரணை கள் மேற்கொள்ளவேண்டுமென தெரிவிக்கப்பட்டதாக அரச அதிபர் தெரிவித்தார். (இ-5)

## ராக்கிங்...

அடிப்படையில் மோசமாகக் கிண்டல் செய்ததுடன் அம் மாணவிகளைப் பாதிக்கும் வகையில் அவர்களுடைய செயற்பாடுகளும் கட்டு மீறிச் சென்றது.

அதனைச் சகிக்க முடியாத சக பயணிகள் பிரஸ்தாப மாண வர்களை எச்சரிக்கை செய்தனர். இதனால் இரு தரப்புக்குமிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இந்த களேபரத்தினால் சாரதி பஸ்சை நிறுத்தி பிணக்கை தீர்க்க முற்பட்டார்.

இதனால் கால்மணி நேரம பஸ் போக்குவரத்து ஸ்தம்பித்தது. இதனையடுத்து மினிவானில் பயணம் செய்த சக பயணிகள் ஒன்று திரண்டு பிரஸ்தாப மாணவர்களை எச்சரித்ததுடன், பொது இடங்களில் அநாகரிக சேட்டைகள் விடக்கூடாதெனவும் கண்டிப்புடன் கூறினர்.

இதேவேளை யாழ். பல்கலைக் கழகத்தில் பகிடிவதை நிறுத்தப் பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ள போதும் சில மாண வர்கள் அதனை அலட்சியம் செய்யும் விதமாக நடந்து கொள்வது வருத் தத்திற்குரியது. (இ-246,6)

## மட்டு.பத்திரிகையாளர் வீட்டின் மீது குண்டுத் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச் சேனையிலுள்ள வீரகேசரிப் பத்திரிகையாளரின் வீட்டின் மீது, இனந்தெரியாதோர் நேற்று முன்தினம் நள்ளிரவு பெற்றோல குண்டு வீசித் தாக்குதல் நடத்தி யுள்ளனர்.

உயிராபத்துக்கள் எதுவும் ஏற்படவில்லையாயினும், வீடு சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

முஸ்லிம் கடும் போக்காளர்களே தமது வீட்டிற்கு பெற்றோல் குண்டுகளை வீசித் தாக்குதல நடத்தினரென்று பத்திரிகையாளர் ஜெயானந்தமூர்த்தி பொலிசில் முறைப்பாடு செய்துள்ளார். (இ)

## அலுவலகம் இன்று திறப்பு

(ஊர்காவற்றுறை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் அலுவலகம் ஒன்று இன்று காலை 10மணிக்கு ஊர்காவற்றுறை சுருவில் வீதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இவ் அரசியல் அலுவலகத் திறப்புவிழா ஊர்காவற்றுறை பிர தேசப் பொறுப்பாளர் செ.றதன தலைமையில் நடைபெறவுள்ளது. (இ-5,75)

## கவிக்கோவின் சொற்பொழிவுகள்

(யாழ்ப்பாணம்)

தமிழகத்திலிருந்து வருகை தந்துள்ள தமிழ்ப் போராசிரியர் கவிக்கோ அப்துல ரகுமான் இன்று காலை 9மணிக்கு யாழ. தேசிய கல்வியியல் கல்லூரியிலும் பி.ப ஒரு மணிக்கு யாழ். பல்கலைக கழக் கைலாசபதி கலையரங்கிலும் சிறப்புச் சொற்பொழிவுகளை ஆற்றவுள்ளார். (ந-5)

## எழுத்துப் பரீட்சை பெப்ரவரியில

(யாழ்ப்பாணம்)

சாரதி அனுமதிப்பத்திர எழுத் துப் பரீட்சைகள் நடைபெறும் திகதிகள் பெப்ரவரி மாதம் வரை வழங்கப்பட்டுள்ளதாக யாழ். மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

மார்ச் மாதம் நடைபெறவுள்ள எழுத்துப் பரீட்சைகளுக்கான திகதி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 21ம் திகதி தொடக்கம் வழங்கப் படவுள்ளதாகவும், தற்பொழுது விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்ப வர்களுக்கும் மார்ச் மாதமே எழுத்துப் பரீட்சை நடைபெறும் எனவும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ந-6)

## காஷ் விலை குறையும்

(கொழும்பு)

அடுத்த புதன்கிழமை முதல் வீட்டுப் பாவனைக்கான காஷ் சிலிண்டரின் விலையை 45 ரூபாவால் குறைக்குமாறு நியாய வர்த்தக ஆணைக்குழு செல் காஷ் நிறுவனத்திற்கு உத்தர விட்டுள்ளது. (த)

## தமிழரின் அபிலா...

தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய உடன்பாடு ஒன்றை எட்டுவதற்கும், அரசாங் கத்தின் மீது அழுத்தம் கொடுப் பதற்காகவும் புலிகள் படைப் பிரிவு வைத்திருக்க வேண்டியுள்ளது.

இதேவேளை இலங்கையில் சமாதான முயற்சிக்கு பெருந் தடையாக இருப்பவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காதான் என்றும் அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்தார். (இ)

## சமாதானப் பேச்சு......

அரசியல் ரீதியாக இணக்கப்பாடு ஒன்றுக்கு வருவதற்கு ஜே.வி.பியுடன் பேச்சு நடத்த வேண்டும்.

விடுதலைப் புலிகளோடு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் ஒன்றிணைந்து செயற்பட முடியு மானால், ஜே.வி.பியுடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமை யிலான பொது ஜன ஐக்கிய முன்னணி இணைந்து செயற்ப டுவதில் எந்தவொரு பிரச்சி னையும் இல்லையென்று ஹரீம் பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார். (இ)



சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 78வது பிறந்ததின நிகழ்வின் சில காட்சிகள்

## விளையாட்டுச் செய்தி

## நியு,சிலாந்து அணியை இந்தியா வென்றது

(புதுடில்லி)

இந்திய, நியூசிலாந்து அணி களுக்கிடையே நடைபெற்ற ஐந்தாவது ஒரு நாள் சர்வதேசப் போட்டியில் இந்திய அணி 2 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 42.3 ஓவர் களின் முடிவில் சகல விக்கெட் டுக்களையும் இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றது

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 44ஓவர்கள் முடிவில் 8விக்கெட்டுக்களை இழந்து 169ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

இந்திய அணியில் யுவராஜ்சிங் 54ஓட்டங்களையும், செவாக் 45 ஓட்டங்களையும் சகீர்கான் ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்க ளையும் பெற்றனர்.

நேற்றைய போட்டியின் ஆட்டநாயகனாக சகீர்கான் தெரிவு செய்யப்பட்டார்.

இதேவேளை எழு போட்டி களைக் கொண்ட இத் தொடரில் நியூசிலாந்து அணி 4:1 என்ற புள்ளியில் முன்னணியில் உள்ளது. (ந-5)

## 30 ஆவது ஆண்டு நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

நான்காவது உலகத் தமிழா ராட்சி மாநாட்டுப் படுகொலை களின் 30ம் ஆண்டு நினைவு தின நிகழ்வு நாளை வெள்ளிக கிழமை பி.ப 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

படுகொலையின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் இடம்பெறும் நிகழ்வில் கொலையுண்டவர்களின் உறவி னர்களைக் கலந்து கொள்ளு மாறு கேட்கப்பட்டுள்ளது. (த)

## மீளக்குடி...

மீள் குடியமர்தல் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளை கட்டம் கட்டமாக முன்னெடுப்ப துடன் அவை தொடர்பில் கால வரையறைகளும் செய்யப் பட்டுள்ளது.

புனர்வாழ்வு விடயங்களில் வெளிநாட்டு நிதியுதவிகளைக் கையாள்வதில் இரு தரப்பும் இணக்கம் கண்டுள்ளன.

மேலும் மனிதவுரிமைகளைப் பேணுதல் தொடர்பான விடயங்கள் சர்வதேச மன்னிப்புச் சபையின் முன்னாள் தலைவரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார். (த)


## அன்பு மாணவர்களே!

எதிர்வரும் 16.01.2003 வியாழக்கிழமை உங்கள் வலம்புரியில் எதிர்பாருங்கள்

5ம் தர மாணவர்களுக்கான

புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்

## அரிய சந்தர்ப்பம் தவறவிடாதீர்கள

ஊக்கம் - ஊக்கம் - ஊக்கம்

10,11,12ந் திகதிகளில் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ள வர்த்தகக் கண்காட்சியில் மட்டுமே ''ஊக்கம'' உற்பத்திப் பொருட்கள்.

| | | விற்பனைவிலை | கண்காட்சிவிலை |
|---|---|---|---|
| * | ஊதுபத்தி | 5/= | 3/= |
| * | கம் போத்தல் | 5/= | 3/= |
| * | பைன்டர் கம் | 15/= | 10/= |
| * | முகப்பவுடர் (50g) | 15/= | 10/= |
| * | பூச்சி உருண்டை பக்கற் | 12/= | 8/= |
| * | மெழுகுதிரி (40) | 56/= | 48/= |

-மற்றும் நீலம், சொட்டுநீலம், சாம்பிராணி, பற்பொடி, வலிகளிம்பு, மிக்சர்வகைகள், பிஸ்கட்டுகள் போன்ற அனைத்துமே மிகமிக மலிவு விலையில்

கண்காட்சியில் பொருட்களை பெற்றுக்கொள்வோருக்கு பெறுமதியான பல பரிசில்களும் உள்ளன.

ஊக்கம் அபிவிருத்தி நிதியம்
சின்னக்கடை
யாழ்ப்பாணம்

(6460)



## ராஜா

யாழ்ப்பாணம்

01.01.2003 முதல்

முரளி, ராதிகா சௌத்திரி, வடிவேல், மணிவண்ணன் மற்றும் பலர் நடித்த

## சுந்தரா ரவல்ஸ்

10.30, 2.30, 6.30

(C/5524)


## இதய அஞ்சலி

தும்பளை நெல்லண்டை பத்திரகாளியம்மன் பிரதமகுருவும் தும்பளை இலட்சுமணன் தோட்டம் ஸ்ரீவீரமாகாளியம்மன் வட பத்திரகாளியம்மன் தேவஸ்தான பிரதமகுருவும், ஆதீன ஹர்த்தாவும் தும்பளை தெற்கு நாவலடி சக்தியம்மன் பிரதம குருவும் யா/ஹாட்லிக் கல்லூரி ஆசிரியரும், அகில இலங்கை சைவசித்தாந்த பண்டிதர் சங்கப் பொருளாளரும்,

எமது திருவள்ளுவர் கோட்டத் தலைவருமான சிவஸ்ரீ.தியாகசோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்களின் கனிஷ்ட புத்திரன்

## "சித்பவன்"

31.12.2002 செவ்வாய்க்கிழமை அகாலமரணம் அடைந்தமையையிட்டுத் துணுக்குற்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு நெஞ்சம் கலந்த இதய அஞ்சலியைச் செலுத்தி இறைவனை வேண்டுகிறோம்.

இலட்சுமணன் தோட்டம்,
தும்பளை தெற்கு
பருத்தித்துறை

ஆ.வடிவேலு,
செயலாளர்
அகில இலங்கைத்
திருவள்ளுவர் கோட்டம்

(6439)

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.01.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.